1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 8-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு மாசிமாதம் 28-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## "நீங்கள் தபஞ்செய்யாமற்..."

சீவியகால முழுவதிலும், விசேஷமாய் இத்தபசுகாலத்திலும் நாம் எல்லாரும் தபஞ்செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். "உலகம் அடங்கலுமுள்ள சகலமனுஷரும் தபஞ்செய்ய வேண்டுமென்று சர்வேசுரன் அறிவிக்கின்றார்" என அர்ச்.சின்னப்பர் கூறுகின்றார். வஞ்சகஅலகை நம்மைக்கெடுக்க எப்போதும் அலைந்துதிரிகிறது. அது நமதுசரீரத்தைப் பக்கபலமாகக்கொண்டு நம்மைக்கெடுக்க உபாயங்களைச் செய்கின்றது? நமதுசரீரமே நமக்குச் சத்துருவாய் இருப்பதால், அதன் இச்சைகளுக்கு நாம் அடிமைகளாகாது அதனைப் பலவழிகளாலும் அடக்கி நடத்திவரவேண்டும். இதைப்பற்றியே நமதுதாயாகிய சத்தியதிருச்சபை நம்மைத்தபஞ்செய்யும்படி தூண்டுகிறது. நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துநாதரும் தபம் அவசியமென்று திருவுளம்பற்றியிருக்கின்றார். அம்மட்டா! தாமுமே நாற்பதுநாள் வனாந்தரத்தில் தபஞ்செய்து முன்மாதிரிகை காண்பித்திருக்கின்றார்.

உலகம், பிசாசு, சரீரம் என்னும் சத்துருக்களின் சோதனையைச் செயிப்பதற்குத் தபம் மகா அவசியம். தவத்தால் தான் நாம் அவைகளைச் சுலபமாகச் செயித்தடக்கலாம். நமதுபாவங்கள் பொறுக்கப்படுவதற்கும் தபம் அத்தியாவசியகம். நினிவே பட்டணத்தாரின் பாவங்கள் தபஞ்செய்ததினால் பொறுக்கப்பட்டன. யோனாஸ்தீர்க்கதரிசி அப்பட்டணத்தாருக்கு என்ன சொன்னார்? "நீங்கள் தபஞ்செய்யாமற் போவீர்களேயாகில் சாகவே சாவீர்கள்" என நகரமெங்கும் கூவிச்சென்றார். அவர்கள் உடனே தங்கள் பாவங்களுக்காகத் தபஞ்செய்ய முற்பட்டார்கள். தேவன் அவர்கள்செய்த தபத்தைப்பார்த்து அவர்களை அழிக்காமல் அவர்களுக்கு மன்னிப்பளித்தார்.

ஆதலால் தபஞ்செய்கிறவன் யார்? எனது பாவங்களினால் என்தேவனை, என் அரியமீட்பரை இழந்தேனே; என் ஆத்துமத்தின் அலங்காரமும், இலட்சணமுமாகிய தேவவரப்பிரசாதத்தை இழந்தேனே; மோட்சபேரின்ப உரிமையை இழந்தேனே என்று எண்ணி எண்ணி மனம்நொந்து உருகி அழுகிறவனே தபஞ்செய்கிறவன்.

தனது பாவங்களைத் தனது மனக்கண் முன்பாக அடிக்கடி கொண்டுவந்து, அவற்றின் அவலட்சணத்தையும், அவற்றிலுள்ள நெறிகேட்டையும், தேவதுரோகத்தையும், நன்றியீனத்தையும் உணர்ந்து, இப்படியான அக்கிரமங்களுக்கும் நான் உட்பட்டேனே; அவைகள் என் ஆன்மாவில் குடிகொள்ள இடங்கொடுத்தேனே; சர்வேசுரனின் பிள்ளையாகிய நான் பிசாசுக்கு அடிமைப்பட்டேனே; என்பிதாவின் அணைகடந்த அன்பை மறந்து அவருக்கு நன்றியீனம் காண்பித்தேனே; சகலவிததோத்திர ஆராதனைக்குமுரியவரை நிந்தித்தேனே என்று எண்ணிஎண்ணி மனஸ்தாபக்கண்ணீர் சொரிகிறவன் தான் தபஞ்செய்கிறவன்.

தேவாதீனமாகத் தனக்கு நேரிடும் துன்பதுரிதங்கள், கஷ்டங்கள் கவலைகள், பொருள் நஷ்டங்கள், வறுமை சிறுமைகள் ஆகியவற்றைத் தனது பாவங்களுக்கு உத்தரிப்பாகத் தேவசித்தத்திற்குப் பணிந்த மனதோடு ஏற்றுக்கொள்ளுகிறவன் தான் தபஞ்செய்கிறவன். திருச்சபையால் குறிக்கப்பட்ட தபக்கிருத்தியங்களைக் குறித்த காலங்களில் குறித்தகிரமப்படி செய்துவருகிறவன் தான் தபஞ்செய்கிறவன். தனது பாவங்களுக்காகச் சர்வேசுரன் தனக்குத் தீர்வைவிதித்துத் தன்னை ஆக்கினைக்குள்ளாக்குமுன் தானே தனக்குத் தீர்வைவிதித்துத் தன்னைத்தண்டிக்கிறவன் தான் தபஞ்செய்கிறவன்.

ஒன்றில் தபம் அல்லது நரகம் என்பதை ஆழமாய்ச்சிந்திப்போர் உள்ளபடியே நடுநடுக்கம் கொள்ளவேண்டியவரே. அதனால் தபஞ்செய்ய விரும்புகிற சகலரும் தங்கள் அக்கிரமங்களால் சர்வேசுரனையும், மோட்சஉரிமையையும் இழந்துவிட்டதை நினைந்து மனஸ்தாபப்படுவார்களாக! தங்கள் பாவங்களின் அவலட்சணத்தைப் பற்றிச் சிந்தித்துக் கண்ணீர் சொரிவார்களாக! சர்வேசுரன் அனுப்பும் துன்பதுரிதங்களை நன்மனதோடு ஏற்றுக்கொள்வார்களாக! தேவகோபாக்கினை வருமுன் தாமேதமக்கு ஆக்கினையிடுவார்களாக! திருச்சபை குறித்த தபமுயற்சிகளைத் தங்களாலானமட்டும் அனுசரிப்பார்களாக!

## பாப்பரசரும் மகாராணியாரும்

1887-ம்ஆண்டு விக்ரோறியா மகாராணியாரின் யூபிலிவிழாவிற்குப் பாப்பரசர் வத்திக்கானிலிருந்து தமது பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்கச் சித்தங்கொண்டார். ஆனால், பாப்பரசர்பிரதிநிதியை லண்டனிலே வரவேற்கும் விஷயமாய்ப் பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஆட்சேபனை பிறந்தது. அப்போது அரசாங்கத்தின்சார்பாக சாள்ஸ்பரிபிரபு அளித்த பதிலிலே, "பாப்பரசர்பிரதிநிதியை வரவேற்பதானது மாட்சிமைதங்கிய மகாராணியாருக்குப்பெருமகிழ்ச்சி தருவதாகும்; பிறநாடுகளிலே கத்தோலிக்க அரசாங்கங்களினால், அன்றேல் ஏனைய புரொட்டஸ்தாந்த அரசாங்கங்களினால் பாப்பரசர் பிரதிநிதிக்கு எத்தகையவரவேற்பு அளிக்கப்படுமோ அது இங்கும் அளிக்கப்படும்; மகாராணியார் இராசப்பிரதிநிதிகளை வரவேற்கும்விஷயமாகச் சட்டம்எதுவும் அவசியமில்லை" எனக் கூறினின்றார். அவர் இவ்வாறு பேசியபோது பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருந்த பிரதிநிதிகள் பலரும் குதூகலம் கொண்டவர்களாய் ஒவ்வோர் வசனத்தின்முடிவிலும் கரகோஷஞ்செய்து ஆர்ப்பரித்தார்கள்.

அப்போது பாப்பரசர்பிரதிநிதியை வரவேற்கும்விஷயமாக ஆட்சேபித்தவர்கள்பிந்தப் பிரித்தானியஅரசரே, அரசிளங்குமாரர், குமாரத்திகளே வத்திக்கான்மாளிகைசென்று பாப்பரசரையே சந்திக்கப்போவார்களாயின் ஆட்சேபியாது வாளாவிருப்பார்களா? கடைசியாகத் தற்போது சிம்மாசனமேறியிருக்கும் எலிசபேத்மகாராணியாரே பட்டத்திளவரசியாய் இருந்தபோது, சென்றவருடம் சித்திரை 13-ந்திகதியன்று தமதுநாயகர்சமேதராய் வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்தபாப்பரசரைச் சந்தித்தபோது, தற்சமையம் தமது பிரசைகளாகியிருக்கின்ற இரண்டுகோடிக்குமேற்பட்ட கத்தோலிக்கமக்கள்பால் தமக்குண்டான அபிமானத்தையும், நன்மனப்பான்மையையும் பகிரங்கமாகக் காண்பிக்கலாயினர். இத்தத்தரிசனையையிட்டும் அற்பசொற்பஆட்சேபனை எழாமல் விடவில்லை. ஆனால், புதிய இராணியார்தமதுபாட்டனாரான ஐந்தாவது ஜோர்ஜ்அரசரினதும் பாட்டியாரான மேரிஇராணியாரினதும் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வத்திக்கான்மாளிகைசென்று அதேவகையான ஓர்தரிசனையளித்துத் திரும்பினார். அப்போது ஐந்தாவது ஜோர்ஜ் அரசதம்பதிகள் பதினொராமபத்திநாத பாப்பரசரைச்சந்தித்தபோது, பிரித்தானிய சாம்பிராச்சியத்திலுள்ள தமது கத்தோலிக்கபிரசைகள் அதிகம் விசுவாச பிரமாணிக்கமுடையவர்களெனப் பாராட்டிக்கொண்டார்கள்.

அன்றுதினம் எலிசபேத்மகாராணியாரும், அவர்நாயகரான எடின்பரோகோமகனும் பாப்பரசரின் பிரத்தியேகநூல் நிலையத்திலே அவருடன் ஒன்றரைமணிநேரம் சம்பாஷித்தார்கள். பின்னர் இராசதரிசகர்கள் இருவரும் வத்திக்கான்மாளிகையின் சரித்திரப்பெருமைவாய்ந்த மாடங்கள், மண்டபங்கள், அறைகளைப்பார்வையிடுவதிலும் வத்திக்கான் இராச்சிய மந்திரிகாரியாலயத்தையும், பாப்பரசர் மாளிகையையும்சேர்ந்த பிரதம அதிகாரிகளுடன் கலந்துசம்பாஷிப்பதிலும், வழிநீளம் ஆங்கில, ஸ்கொத்திலாந்த, கனடிய, பிடாகல்லூரிகளைச்சேர்ந்த குருமார், குருத்துவமாணவர்களின் மனோற்சாகமானவாழ்த்துகளைப் பெறுவதிலும் ஒருமணிநேரம் செலவிடலாயினர். இங்கிலாந்திலே சமயப்புரட்சி ஏற்பட்ட பின்னர் பிரித்தானிய இராசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வத்திக்கானுக்குஅளித்த ஐந்தாவதுதரிசனை இதுவாகும்.

அவர்களில் முதன்முதலாகப் பதின்மூன்றாம்சிங்கராய பாப்பானவரைச் சந்திக்குமாறு அங்குசென்றவர் ஏழாம் எட்வாட் அரசர். அவரைத் தொடர்ந்து ஐந்தாம்ஜோர்ஜ்அரசர் பதினொராம் பத்திநாதபாப்பானவரைச் சந்தித்தார். இவரைத் தொடர்ந்து அப்போதுவேல்ஸ் இளவரசராகவிருந்த எட்டாம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## கம்யூனிஸத்திலிருந்து விடுதலை

— நியூயோக்

"கிறம்லினிலுள்ள சோவியற் எசமானர்களுக்கும், பாமர சோவியற்மக்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைச் சுதந்திரஉலகம் நன்றாகப்புரிந்துகொள்ளவேண்டும். சோவியற் ஆட்சியாளர்வேறு; சோவியற் குடிகள் வேறு. ஸ்ராலினிஸ்ற்ஆட்சியாளர் நம்முடையபகைவர்கள் என்றால், சோவியற்நாட்டில் அவரால்(ஸ்ராலினால்)அடிமைப்படுத்தப் பட்டுள்ளமக்கள் நம்முடையநண்பர்கள்" என்று மஸ்கோவில் அமெரிக்க ஸ்தானீகர் பதவிவகித்த ஏலன் ஜி. கர்க்அவர்கள் கூறுகிறார்.

திரு. கர்க்அவர்கள் 1949-ம் ஆண்டுமுதல் மஸ்கோவில் அமெரிக்கஸ்தானீகராகப் பதவிவகித்திருந்தார். சென்றவாரம் இவரது இராஜினாமா உத்தியோகமுறையில் அங்கீகாரமாகியது. இப்போதுஇவர் சோவியற் கொடுங்கோலிலிருந்து தப்பிவருகின்ற அகதிகளுக்குக் கஷ்ட நிவாரணம் அளித்துவருவதும், ரூஷியமக்களின் விடுதலையை நோக்கமாகக்கொண்டதுமான அமெரிக்ககம்மிற்றியின் அக்கிராசனராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்தச்சம்பவத்தையொட்டி விடுத்த அறிக்கையில்தான் திரு. கர்க் அவர்கள் சோவியற்ஆட்சிப் பீடத்துக்கும், மக்களுக்கும்உள்ள வேறுபாட்டை ஊன்றிச்சிந்தித்து உணரும்படி வற்புறுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுவதாவது: அமெரிக்கமக்களுக்கும், சோவியற்மக்களுக்கும் ஒருவிதமான பிணக்கும் இல்லை. கம்யூனிஸத்தினால் முதன்முதலாக மிகமிகக் கொடுமைப்பட்டவர்கள் சோவியற்மக்களே ஆவர். எனவே, சுதந்திரஉலகின் கம்யூனிஸ்த எதிர்ப்புக்கிளர்ச்சியில் முதற்கூட்டாளிகளும் அவர்களே. சோவியற்மக்கள் மஸ்கோ சர்வாதிகாரிகளின் ஆக்கிரமிப்புக்கொள்கையையும், அடக்குமுறை ஆட்சியையும் வெறுக்கின்றார்கள். பொல்ஷெவிக் நுகத்தடியிலிருந்து எப்போது விடுதலைபெறுவோம் என்று துடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

## ருஷியபாட்டாளிகளின் பாடு

— நியூயோக்

சோவியற்தொழிற்சாலைகளில் பாட்டாளிகள் படும்பாடு சொல்லுந்தரமன்று. கிறம்லின் அதிகாரவர்க்கம் சித்திரிக்க முயல்வதுபோல, அது பாட்டாளிகளின் "சுவர்க்கம்" அல்லவே அல்ல. அதற்குமாறாக அதைப் பாட்டாளிகள் நரகம்என்பதே பொருந்தும். இரண்டாவது மகாயுத்தத்திற்குப்பிறகு சோவியற்நாட்டிலிருந்துதப்பிய ருஷிய தொழிற்சாலைச் சிப்பந்திஒருவர் அங்கு ருஷிய பாட்டாளிகள் அனுபவித்துவரும் வேதனைகளை அறிக்கைசெய்திருக்கிறார். அவரது அறிக்கை பின்வருமாறு வகைப்படுத்தித் தரப்படுகிறது:

இயந்திரங்களோடு புழங்குகிறவர்களுக்குப் பாதுகாப்புஏற்பாடுகள் ஒன்றும்கிடையாது. எந்தவேலைக்காராவது பாதுகாப்பு அல்லது பந்தோபஸ்து வேண்டுமென்று மேலதிகாரிகளுக்கு முறையிட்டுக்கொண்டால், அந்த அதிகாரி கண்ணைமூடிக்கொண்டு "அபத்தம்பேசாதே, போஅப்பாலே" என்று விரட்டிவிடுவார். தொழிலாளிஒருவர் கொல்லப்பட்டால் (நான் வேலைசெய்த இடத்தில் பாரந்தூக்கிகளிலிருந்து விழுந்துமாண்டவர்கள் பத்துப்பேர்கள்) அல்லது கால்கைமுரிந்து அங்கவீனம் அடைந்தால், அதைவிசாரிக்கச் சும்மா பெயருக்குத்தான் ஒரு கம்மிஷன் இருக்கிறது. அது ஒருகேலிக்கூத்து. விபத்துக்கானபழியைத் தொழிலாளிகள்மீதே எப்படியாவது இந்தக்கம்மிஷன் சுமத்திவிடுகிறது. ஆகையினால், பென்ஷனைப்பற்றியோ அல்லது நஷ்டஈட்டைப்பற்றியோ தொழிலாளியோ அல்லது அவரதுஉறவினரோ ஒன்றும் பேசிக்கொள்ள முடியாது.

சோவியற் தொழிற்சங்கங்கள் தொழில்அதிபர்சார்பாக உள்ளவை. ஏனெனில், ருஷியாவில் தொழில்அதிபர் அரசாங்கமாகும். குறைந்தகூலிக்குக் கூடியபட்சவேலையை எளிய தொழிலாளியிடமிருந்து ஈவு இரக்கமின்றிக் கசக்கிப்பிழிந்துவாங்க இத் தொழிற்சங்கங்கள் கம்யூனிஸ்த தர்பாரால் பயன்படுத்தப்படுகின்றன. சோவியற்நாட்டில் சம்பளவெட்டுக்கு உற்பத்திச்செலவை மட்டுப்படுத்துவது என்றுபெயர். கிறிமியாவில் விடுமுறைத் தினங்களை உல்லாசமாகக் கழிப்பதற்காகப் பிரமாதமான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப் பட்டிருக்கின்றது என்று கம்யூனிஸ்தர்கள் தடபுடலாகப் பிரசாரம்செய்கின்றனர் அல்லவா, அந்தஇடத்திற்கு ஒரு தொழிலாளியாவது இதுவரை போனதாகக் காணோம்என்கிறார் இந்த ருஷியசிப்பந்தி.

## ஜனாதிபதி ட்றூமன் அனுதாபம்

— வாஷிங்ரன்

பிரித்தானியமன்னர் ஆறும்ஜோர்ஜ் காலமானதுகுறித்து ஜனாதிபதி ட்றூமன் அவர்கள் வெளியிட்டுள்ள அனுதாபஅறிக்கையிலே, "எவ்வளவோ இன்னல்களுக்கிடையிலும் பொறுமையோடு ஈடுகொடுத்துத் தளராதுநின்ற பெரியார்" என அவரைப் பாராட்டியிருக்கிறார். மேலும்அவர் குறிப்பிட்டதாவது: ஆங்கில முடியரசின் உன்னதமான பாரம்பரியத்தைச் செவ்வனேகாத்துவந்த உலகப்பெரியார் ஒருவரை, மகிபர் ஆறும்ஜோர்ஜ் மன்னரின் மறைவினாலே இழந்துள்ளோம். உலகைவருத்திய எவ்வளவோ இன்னல்களுக்குஇடையிலே—குறிப்பாகச் சரித்திரம்காணாத பயங்கர பெரும் போரின்இடையிலே (2-வது மகாயுத்தம்) — ஈடுகொடுத்து எடுப்பாகக் கடமையாற்றியவர் ஆறும்ஜோர்ஜ் அரசர். அன்னாரது வீரம்பொருந்திய சகிப்புத்தன்மையானது பிரித்தானிய மக்களின் பராக்கிரமத்துக்கு உண்மையானதோர் எடுத்துக்காட்டு ஆகும். தனிமனிதன் விடுதலைக்கும், சர்வாதிகாரிகள் அறவேவெறுக்கும் சுதந்திர ஸ்தாபனங்களுக்கும் காவலனாக அவர் விளங்கினார். மக்கள் கஷ்டங்களைப் பகிர்ந்துகொண்டஅவர் சாம்பிராச்சிய முழுவதினதும் விசுவாசத்தையும், அபிமானத்தையும் சம்பாதித்துக் கொண்டார். அது சாதாரணமாக மன்னனுக்கும் குடிகளுக்கும் இடையேஉள்ள தொடர்புகளில் ஒரு படிஉயர்வானது. ஆரசி எலிசபெத் அவர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக!

## அச்சிஸனின் அனுதாபம்

— வாஷிங்ரன்

ஆறும்ஜோர்ஜ் மன்னர் காலமான செய்திகுறித்து அமெரிக்க வெளிநாட்டுமந்திரி அச்சிஸன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலே, "இச் செய்திகேட்டுத் தாங்கொணாத் துயர் அடைந்தோம். பிரித்தானியுடனும் சாம்பிராச்சியத்துடனும் நேசப்பிணைப்பில் நெடுநாள்இணைந்துள்ள அமெரிக்க மக்கள் இந்தப்பெரும் நஷ்டம்குறித்துத் தங்கள்அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள். நாட்டுக்கும், மக்களுக்கும் இன்னல்களைக்கண்டு சற்றும் மனம்தளராமல் சேவைபுரிந்த ஆறும்ஜோர்ஜ்அரசரின் மனத்திண்மை பிரித்தானியமக்களின் பண்பாட்டையே பிரதிபலித்தது" எனத் தெரிவித்திருக்கிறார்.

# சுதேச வர்த்தமானம்

## வண. சியேர்ப்கா சுவாமியார்

நம்அச்சியந்திரசாலையின் மனேஜராயிருந்து சுகம்நோக்கி இற்றைக்குஆறு மாதங்களின்முன் ஐரோப்பாவிற்குச் சென்றிருந்த வண. ஏ. சியேர்ப்கா சுவாமியவர்கள் சென்ற வெள்ளிக்கிழமைகாலை சேமமே யாழ்ப்பாணம் வந்து சேரலாயினர்.

## மகாராணியின் முடிசூட்டுவிழா

இரண்டாவதுஎலிசபேத் மகாராணியாரின் முடிசூட்டுவிழாத்தினம் வருகிற ஆவணிமாதம் 7-ந் திகதியாய் இருக்கக்கூடுமென்றுகருதி அரண்மனை அதிகாரிகள் வேண்டியஆயத்தங்களைச் செய்துவருவதாகச் சென்ற 23-ந் திகதி சனிக்கிழமை லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. மகாராணியார் இந்தத்திகதியை அங்கீகரிப்பாராயின் ஓர்பிரித்தானியஅரசர் தாம் சிம்மாசனமேறிய அதேவருடத்தில் மகுடாபிஷேகம் செய்யப்பெறுவதானது கடந்த 225 வருடங்களிலும் முதன்முறையாக நடைபெறும் ஓர் சம்பவமாகும். ஆவணி 7-ந் திகதி ஓர் வியாழக்கிழமைவருகின்றது. கடந்த காலங்களிலே அரசர்களின் முடிசூட்டு விஷயமாய்ப் பிரஸ்தாபம்பெற்ற ஓர் நாள் இதுவாகும்.

## இரு அபேட்சகர்கள்

பாராளுமன்றத்திலே காலியாகவிருக்கும் அக்குறெசாத்தொகுதிக்கு இருவர் அபேட்சகர்களாக முன்வந்து சென்றவெள்ளிக்கிழமை மாத்தறைக் கச்சேரியிலே தங்கள் நியமனபத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இவர்களுள்ஒருவர் திரு. ஜே. எஸ். டி சில்வா அவர்கள். இவர் யு. என். பி. கட்சியைச்சேர்ந்தவர். மற்றவர் டக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கஎன்பவர். இவர் கம்யூனிஸ்தகட்சியைச் சேர்ந்தவர். இருவரும்முறையே நிறங்களாகப் பச்சையையும், சிவப்பையும் சின்னங்களாகக் குடையையும், நட்சத்திரத்தையும் கொண்டுள்ளார்கள்.

## காணமற்போன இருபீடிகள்

பொறலெஸ்கமுவாவிலே வசிப்பவரான திருமதி டி. எம். விஜயசிங்கஎன்பவரின்கீழ் 16 வயசுடைய டி. எட்வின் என்பவனும், 15 வயசுடைய ஜேம்ஸ் என்பவனும் வேலைகாரராய் இருந்தார்கள். சென்றஆடிமாதம் 22-ந் திகதியன்று ஜேம்ஸ் தேங்காய்மட்டைகள் பொறுக்கிக்கொண்டிருந்தபோது எட்வின்சென்று தனதுபீடிகள்இரண்டை அவன்களவெடுத்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டினான். தான் எடுக்கவில்லையென்று ஜேம்ஸ் மறுத்தான். அதனால் இருவருக்குமிடையே சண்டை மூண்டுவிட்டது. ஜேம்ஸ் ஓர் மண்வெட்டியை எடுத்தோங்கி எட்வினைப் பயமுறுத்தினான். எட்வின் பின்முன் பாராது ஓர்கமுகஞ்சலாகை கொண்டு ஜேம்ஸின்தலையிலே அடித்துவிடவே, அவன் மூர்ச்சித்துவிழுந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டுச் சத்திரவைத்தியம் செய்யப்பெற்றுப் பிந்த இறந்துபோயினான். கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே இந்தக்கொலைவழக்கு சென்ற வியாழக்கிழமை விசாரணைசெய்யப்பெற்றபோது, தான் கைபிழைபாட்டுக் கொலைக்குற்றவாளியென்று எட்வின் ஒப்புக்கொண்டான். யூரிமாரும் அதனை ஏற்றுக்கொண்டனர். நீதியரசர் அவனை மூன்றுவருடகாலத்துக்கு 1500 ரூபா நன்னடத்தைப் பிணையில்விட்டார்.

பாலைதீவு

# அர்ச். அந்தோனியார் திருநாள்

# 16—3—52.



இத்திருநாள் மகோற்சவம் பங்குனிமாதம் 11-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். 15-ந்திகதி சனிக்கிழமை அர்ச். அந்தோனியார் திருச்சுரூபம் வீதிகொண்டு சுற்றுப்பிரகாரம் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை 4-30 மணி தொடக்கம் திவ்வியபூசைகள் நிறைவேறும். யாத்திரிகரின் ஞானக்கடமைகளைக் கவனிப்பதற்குப் பலகுருப்பிரசாதிகள் திருப்பதியிலே சமுகமாயிருப்பார்கள்.

1. பெரியகடல் லைசென்சுள்ள மோட்டர்லாஞ்சுகளுக்கு மாத்திரம் பாலைதீவுக்குப் பிரயாணஞ்செய்ய லைசென்ஸ் கொடுக்கப்படும்.
2. **வத்தைகளிலும், மோட்டர் லாஞ்சுகளிலும் லைசென்ஸின்படி பிரயாணிகளை ஏற்றவேண்டும்.**
3. தண்ணீர் குறைவாயிருப்பதினால் கூடியளவு வத்தைக்காரரும், யாத்திரிகரும் தண்ணீர்கொண்டுபோகக் கடவார்கள்.
4. **செபமாலைக்கடைகளும், தேநீர்—உணவுக்கடைகளும் மாத்திரமே கட்டலாம்.**
5. சென்றவருடங்களில் நடைபெற்றமாதிரி—மெழுகுதிரிகள் கட்டளைச் சுவாமியாருடைய கடையில் மாத்திரம் விற்கப்படும்.
6. கடைகட்டவிரும்புகிறவர்கள் கட்டளைச்சுவாமியாரிடம் உத்தரவு கேட்கவேண்டும். தீன்பண்டங்களைக் கண்ணாடிப்பெட்டிகளில் வைத்துக்காப்பாற்றவேண்டும்.

**இந்தக்கட்டளைக்கு அமையாதவர்களின் பொருட்கள் இவ்வருடமுதல் பறிமுதலாக்கப்படும்.**

## துக்கப்பாடற்பூசை

பலவருடகாலமாகப் பாலைதீவ யாத்திரிகருக்கு வெவ்வேறு உதவிகள் புரிந்துவந்தவர்களான திரு. மோசேஸ் மூப்பரினதும், திரு. தம்புக்குட்டிமூப்பரினதும், ஏனையஉபகாரிகளினதும் ஆன்மஇளைப்பாற்றிக்காகப் 15-ந்திகதி சனிக்கிழமைகாலை 6-30 மணிக்கு ஓர் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

கட்டளைக்குரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### மாஜி பாதிரியாரின்மனு

ஜேர்மனியிலே மெயின்ஸ் நகரிற் சமீபத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்ற கல்யாணஞ்செய்த—மனந்திரும்பிய பாதிரியாரான வண. றுடல்வ் கோயெத்சுவாமியார் திருச்சபை ஐக்கிய எட்டுநாள் செபககூட்டத்தில் பேசியபோது, தங்கள் புறொட்டஸ்தாந்த சகோதரர்கள் "திறந்திருக்கும் கதவை"க் கண்டுகொள்ளும்படியாக மன்றாடிவருமாறு மனுப்பண்ணிக் கொண்டார். குருப்பட்டம் பெற்றபின்னும்குடும்பவாழ்க்கையைத் தொடர்ந்துநடத்த அனுமதிப்பதாய்த் தாம் பெற்றுக்கொண்ட இளக்காரமானது கிறீஸ்து ஐக்கியத்துக்கு வழிகாட்டுவதிலே ஓர் சிறந்த இயக்கமென அவர் வர்ணிக்கலாயினர். "திருச்சபையின் இந்தத்தீர்மானத்தைச் சரிவர விளங்கிக்கொள்ளாதவர்கள் தங்கள் அவநம்பிக்கையையும், சந்தேகத்தையும் மேற்கொண்டு தேவனின் அழைப்புக்குத் தங்கள் இருதயங்களைத் திறக்கும்படியும். தங்கள்முன்னோரது திருச்சபையினிடமாகச் செல்லும் பாதையைத் திரும்பக் கண்டுகொள்ளும்படியும் மன்றாடுங்கள்" எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

### மரியமதலேனாளின் கல்லறை

எபேசஸ்நகரிலே அர்ச். மரியமதலேனாளின் கல்லறையைத் தாம் கண்டுபிடித்துவிட்டதாகப் பேராசிரியர் மசிக்னன்அவர்கள் தெரிவித்திருக்கின்றார். விக்கிரகங்களைவணங்க மறுத்ததற்காக டேசியஸ் சக்கிரவர்த்தி (249—251) நடத்திய வேதகலாபனையின்போது, உயிருடன் கிறீஸ்துவவாலிபர்கள் எழுவர் புதைக்கப்பட்ட குகைவாயிலின் கீழ் இந்தக்கல்லறை இருப்பதாக அவர் கூறுகின்றார். நித்திரைசெய்வோர் எழுவரெனறோமை வேதசாட்சிகள் சரித்திரத்திலே குறிக்கப்பட்டுள்ள இந்தவேதசாட்சிகளின் நாமங்கள் மக்ஸிமியன், மால்சுஸ், மாட்ரினியன், டெனிஸ், ஜோண், செறுபியன், கொன்ஸ்ரன்ரின் என்பனவே. கிறீஸ்துநாதரைப் பின்தொடர்ந்துசென்ற பரிசுத்த ஸ்திரீகளுள் ஒருவரின் சரீரமானது எழுவேதசாட்சிகளினதும் சமாதானஇளைப்பாற்றியைப் பாதுகாப்பதற்காகக் குகையின்வாயிலே அடக்கஞ்செய்யப்பட்டுள்ளதென்று அந்நகரில் இருந்துவரும் பழைய பாரம்பரியம் நிலைநிறுத்துகின்றது. இந்தப்பரிசுத்த ஸ்திரீ அர்ச்.மரியமதலேனம்மாள் அல்லாது வேறெவரும் அல்லவென்றும், இவள்சரீரம் பத்தாம்நூற்றாண்டிலே கொன்ஸ்தாந்திநோப்பிள்நகருக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டதென்றும் பேராசிரியர் மசிக்னன் கூறுகின்றார்.

### இரு யூபிலிவிழாக்கள்

இவ்வருடத்திலே மலையாளத்தில் இருயூபிலி விழாக்கள் பெருமிதமாகக் கொண்டாடப்படவிருக்கின்றன. அவற்றில் ஒன்று, அப்போஸ்தலரான அர்ச்.தோமையார்இந்தியாவுக்கு வந்த 19-ம்நூற்றாண்டு விழாவாகும். மற்றது, அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதமடைந்த நான்காம்நூற்றாண்டு விழாவாகும். இவ்விருவிழாக்களின் கொண்டாட்டங்களும் இவ்வருட இறுதியிலே புதுவருடப்பிறப்புத் தினமன்று ஆரம்பமாகும். ஓர் சற்பிரசாத மகாநாட்டுடனும், இந்தியாவின் மனந்திரும்புதலுக்கான செபங்களுடனும் உச்சநிலை அடைவதாகும். கீழைத்தேச திருச்சபைத் திருச்சங்கத்தின் காரியதரிசியான கருதினால் திசறன்ற் ஆண்டவர்ஈருந்தகொண்டாட்டங்களில் கலந்துகொள்வார்போல் தெரிகிறது. பாரம்பரியம் கூறுகிறபடி, அப்போஸ்தலரான அர்ச். தோமையார் மலையாளக்கரையிலே கி. பி. 52-ம்ஆண்டு வந்திறங்கி மைலாப்பூரிலே வேதசாட்சியாகுமுன் பல்லாயிரக்கணக்கான இந்துக்களை மனந்திருப்பி அநேககோவில்களைக் கட்டியெழுப்பினர். ஏறக்குறைய 1500 வருடங்களுக்குப்பின் அர்ச். பிரான்சீஸ்சவேரியார் இந்தியாவுக்கு வந்தார்.

### சர்வதேச சற்பிரசாதமகாநாடு

பார்சலோனா நகரிலே இவ்வாண்டு வைகாசி 27-ந்திகதி முதல் ஆனி 1-ந்திகதிவரையிலே யுத்தத்திற்குப்பிந்திய முதலாவது சர்வதேச சற்பிரசாதமகாநாடு நடந்தேறும்போது, உலகின் சகலபகுதிகளிலுமிருந்து அதற்குப் பத்துலட்சம்பேருக்கு மேற்பட்ட கத்தோலிக்கமக்கள் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இது 35-வது சற்பிரசாத மகாநாடாகும். முதலாவது மகாநாடு 1881-ம்ஆண்டு லில்நகரில் நிகழலாயிற்று. கடைசியான மகாநாடு புடாபெஸ்ற் நகரிலே 1938-ம்ஆண்டு நடைபெற்றது. 1940-ம்ஆண்டு நீஸ் நகரில் நிகழவிருந்த மகாநாடு யுத்தங்காரணமாக நிறுத்திவிடப்பட்டது. இவ்வருடமகாநாட்டின் விஷயம் "திவ்வியநற்கருணையும், சமாதானமும்" என்பதே. வைகாசிமாதம் 27-ந்திகதி செவ்வாய்க்கிழமை பாப்பரசரின் கருதினால்பிரதிநிதி ஆண்டவருக்கு அருளப்படும் ஆடம்பரமிக்க வரவேற்புடனும், அன்றிரவுமுழுவதும்திருஇருதய ஆண்டவரின் மகாலயத்தில் நடைபெறும் விழிப்பாராதனையோடும் மகாநாட்டு வைபவம் ஆரம்பமாகும். உலகின் சகலபகுதிகளிலுமிருந்து சமுகமளிக்கவிருக்கும் அநேக யாத்திரைக்கோஷ்டிகளில் ஒன்று, நியூயோக்நகரில் ஒழுங்குபடுத்தப்படுவதாகும். இது ஆயிரம் யாத்திரிகர்களைக் கொண்டதாய், நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவரது தலைமையிலே 'கன்ஸ்ரிரியூஷன்' எனும் அத்திலாந்திக்சமுத்திர பிரயாணக் கப்பலில் அங்குபோய்ச்சேரும்.

# அர்ச் அகுஸ்தீனின் புகழ் உரை நூல்

( Confessions of St. Augustine )

**தனிநாயக அடிகள்**

(தொடர்ச்சி)

**இறைவ, என்குழந்தைப் பருவத்தின் நலங்கள் அனைத்தும் நின்னுடையவை. என் பெற்றோரும், உற்றோரும் நின் இரக்கத்தின் கருவிகள்.**

VI. 7. இறைவ, நான் புழுதியும் சாம்பலும் ஆனவன். ஆயினும் நின் இரக்கத்தைக் குறித்து விளம்ப எனக்கு நீ அருள்வாயாக. யான் விளம்பும் முறையும் எனக்கு நீ அருள்வாயாக. ஏனெனின், மக்களின் இகழ்ச்சியைக் குறித்து அன்று; இறைவனின் இரக்கத்தைக் குறித்தே யான் மொழிந்தேன். நீயும் என்னை இகழ்தல் கூடும். நீ இகழினும், என்பால் மீண்டும் இரங்குவது திண்ணம். நின் இரக்கம் அளித்தவரங்களே இதுகாறும்என்னைக்காப்பாற்றி வந்தன. இவற்றை என்நினைவு அறியாது. என்னை உருவாக்கத் துணைக்காரணராயிருந்து, என் உடம்பை ஈன்றோராகிய என் தாய் தந்தையரிடமிருந்தே, இவற்றையான் அறிந்துகொண்டேன்.

என்உயிரைக் காப்பாற்றுதற்கும், யான் களிப்புறுதற்கும் என் தாயின் பாலைப் பருகிவந்தேன். என் பொருட்டுத் தம் மார்பில் பாலை நிரப்பியவர் என் அன்னையும் அல்லர், என்செவிலியரும் அல்லர். நீயே பல்வகை உயிர்க்கும் நின் ஆணைச் செல்வங்களை விதித்துள்ளவாறு, எனக்கும் என்குழவிப் பருவத்தில் உணவைநல்குதற்கு அன்னாரைக் கையாண்டாய். நீ கொடுத்த அளவேஅன்றி மிகுதியை யான்விரும்பாததும் நின் திருவருட் பேறேயாம். எனக்கு உணவு ஊட்டியவர் நீ கொடுத்ததை எனக்குக்கொடுக்க விரும்பியதும் நின்திருவருட் பேறே. அவர் உள்ளத்தில் நீ நிலைநாட்டிய அன்பினாலேயே, நின்திருவருட்பேற்றினால் தம் மார்பில் சுரந்த பாலினை அவர் அத்துணைப் பெருவிருப்புடன் எனக்கு நல்கிவந்தனர். அவர்பால் இந்நலத்தினை யான் பெற்றது அவர்க்கே ஒரு நலனாயிற்று. எல்லாநலன்களும் நின்னிடமிருந்தே வருதலால், இறைவ, அவரிடமிருந்து யான் அந்நலன்களைப் பெற்றேன் அல்லேன். அவர் வழியாகவே அவற்றைப் பெற்றேன். பிற்காலத்திலே தான் இவ்வுண்மையை உணர்ந்துள்ளேன். நீ எனக்கு உள்ளும் புறம்பும் அளித்துவரும் எல்லா நலன்களாலும், இதனை வளமுறத் தெளிவாக்கியுள்ளாய். அக்காலத்தில் யான் அறிந்தவை பால்பருகுதலும், உள்ளம்நிறைவுள்ளவரை சிறிதுபோழ்து வாளாகிடத்தலும், துன்புற்றவழி அழுதலும் ஆகிய இச்செயல்களேயன்றி வேறல்லபிற.

பின்னர் என்குழவிப்பருவச் செயல்களுள் இளநகை அரும்புதலையும் சேர்த்துக்கொண்டேன். முதன்முதல் துயிலுங் காலை–அதன்பின் விழித்தெழும் அமயம்—இஃதும் என்நினைவில் இல்லை. பிறர்கூறவே கேட்டுள்ளேன். இவ்வாறு குழந்தைகள் சிரிப்பதை யானே கண்டுள்ளதால், இதனை நம்புகின்றேன். நாளடைவில் யான் எங்குள்ளேன்என உற்றுநோக்கலாயினேன். என்தேவைகளைத் தீர்ப்பவர்க்கு அவற்றை அறிவிக்க வேண்டுமெனும்விருப்பம எனக்குத் தோன்றியது. ஆயின், என்தேவைகள் அகத்துள்ளே அடங்கிஇருந்தன; அவரோ, எனக்குப் புறத்தே இருந்தனர். என்உள்ளத்துள்புகும் ஆற்றல் அவர்க்கு இல்லை. எனவே, என்கால்கைகளை நாற்புறமும் உதறிவீசியும்,சிலஒலிகளைஎழுப்பியும் சமிக்கை காட்டினேன். என்னால் இயன்றமட்டும் இச்சமிக்கைகளால் என்தேவைகளை அறிவுறுத்தினேன். ஆயின் பிறர் அவற்றை உணர்ந்திலர். யான் வேண்டியவை எனக்குக் கிடையாதபொழுது, என்பெற்றோர்பால் வெகுண்டேன். அவர் எனக்குக் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டியவர்போல் வெகுண்டேன். மேலும்வெகுளியோடு கத்திக்கதறிப் பழிவாங்கினேன். பிறகுழந்தைகளின் இயல்புகண்டு, எல்லாக்குழந்தைகளும் இவ்வாறே செய்வர் என அறிந்துகொண்டேன். யானும் இவ்வாறே செய்தேன் என்பது என்னைஅறிந்த என் செவிலியர்பால் அறிந்தேன் அல்லேன்; என்னை அறியாத குழந்தைகள் பிறர்வழியேஅறியலானேன். என் குழந்தைப்பருவம் பல்லாண்டுகட்கு முன்னரே இறந்தும், யான்இன்னும் இறவாமல் உயிரோடிருக்கின்றேன்.

என் ஆண்டவா, என் கடவுளே, நீ என் குழந்தைப்பருவத்தில், உயிரையும் உடலையும் எனக்கு அளித்தாய்; என்உடம்பில் ஐம்பொறிகளையும் உதவினாய்; உறுப்புக்களை அமைத்தாய்; உருவும் தோற்றமும் தந்தாய்; அதன் பொதுநலத்திற்கும், பாதுகாப்பிற்கும், உயிருள் படைப்பின் இயற்கைப் பண்புகள் அனைத்தையும் நிலைநாட்டினாய். இச்செயல்கள் அனைத்தும் இயற்றிய இறையோய்! யான் இவற்றின் வாயிலாய் நின்னைப் புகழ்ந்தேத்த வேண்டுமென எனக்கும் கட்டளையிடுவை, நின் திருப்பெயரைப் போற்றிப்பாடவே, பரம்பொருளோய்! ஏனெனில், நீ தமியையாய் இவற்றை இயற்றியிருப்பினும் நீ இறைவன், எல்லாம் வல்லை, நல்லை. நீ தமியை, எல்லாப்பொருட்களுக்கும் மேற்கோளாக விளங்குவை. நின் ஆணையால் அனைத்தையும்உருவாக்கியும், ஒழுங்குற அமைத்தும் வருகின்றஎழிலினை. உன்னையன்றி மற்றைஎவரும் இவற்றை ஆக்க வல்லார்நர் அல்லர். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்க
## பொதுக்கூட்டம்

பங்குனிமாதம் 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்குக் குறிக்கப்பட்டிருந்த இக்கூட்டம் பின்போடப்பட்டிருக்கிறது. கூட்டத்தின் திகதி பிந்த அறிவிக்கப்படும்.

H. லெக்குத்தூர், O.M.I
விக்கார் ஜெனறல்,
ஞானத்தலைவர்.

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| சனி | 1 | அ. அல்பீனப்பர் | (ஊ) |
| ஞா | 2 | தபசுகால 1-ம் ஞாயிறு — 80 வேதசாட்சிகள் | (ஊ) |
| திங் | 3 | அ. குணகுந்தம்மாள் | (ஊ) |
| செ | 4 | அ. கசிமீர் | (வெ) |
| புத | 5 | அ. எயுசேபியார் | (ஊ) |
| வி | 6 | அ. பெர்பேர்த்தம்மாள் | (சி) |

சத்தியவேத
பாதுகாவலன்

1952-ம் ஆண்டு
மாசிமாதம் 28-ந் திகதி

## பங்குனி மாதம்

பங்குனிமாதம் என்பது கத்தோலிக்ககுடும்பம் ஒவ்வொன்றுக்குமே—கத்தோலிக்கமக்கள் ஒவ்வொருவருக்குமே மிகஅருமையான ஓர்பக்தியை—கன்னிமரியாயின் விரத்தபத்தாவும், தேவசுதனின் திருக்கைத்தாதையும், தாவீதுஇராசாவின் மேன்மைதங்கியபுத்திரருமான அர்ச். சூசையப்பரின்பக்தியை—எமது இதயங்களிலே மறுமலர்ச்சிஅடையச்செய்வதான மனோகரமிக்க ஓர்மாதமாகும். அதன் இனிமையானபேரைச்சொல்லக் கேட்கும்போதே அம்முனிபுங்கவரில் அன்புகொண்டுள்ளபக்தகோடிகள் அனைவரினதும செவிகளிலே இன்பத்தேன்வந்து பாய்வதுபோலாகும். "துன்பப்படுவோர்களுக்கும் — துயரத்தால் வாடுவோர்க்கும் — இன்பமான தஞ்சமே" என்று கையெடுத்துவரும் தங்கள் "காவலாம்சூசைதந்தை"யின் வணக்கமாதம வந்ததேயென்று அவர்களெல்லாம் ஆனந்தபூரிதராய் அவரைப்பாவாலும், மனப்பூவாலும் போற்றித்துதிக்கும் பூசிதமான ஓர்காலமாகும்.

நம்மாதவனைப்பற்றிச் சுவிசேஷம் உள்ளபடியே அதிகம் சொற்பமாக நமக்குஅறிவித்தபோதிலும் கத்தோலிக்கர் ஒவ்வொருவரதும் இதயங்களிலே அவர்ஓர் உச்சிதஸ்தானத்தை—எம்மெல்லோரதும் அன்பில் ஓர்உசிதமான இடத்தை வகித்திருக்கின்றார். அவரை "ஓர் நீதிமான்" என்று அது எடுத்துக்கூறுவதிலிருந்தே நமதுதிவ்வியகர்த்தரின் பாதுகாவலரும், திருக் கைத் தாதையுமான — திருக்குடும்பத்தின் மூன்றும் ஆளான அவர்பெருமையையும், பெருந்தகைமையையும் சிறப்பாகப் புகழ்ந்துபாடுகிறதுஎனலாம். "நீரூற்றுக்கு அதிகஞ் சமீபமானதண்ணீர் அதிகம் சுத்தமாய் இருப்பதுபோல, பரிசுத்தத்தனத்தின் ஊற்றானவருக்கு அதிகஞ்சமீபமாய் இருந்தமையே அர்ச். சூசையப்பரின் பரிசுத்ததனத்திற்குக் காரணம்" என்று அர்ச். தோமாஸ் அக்குயினஸ் நம்புகின்றார். "கிறீஸ்துநாதரின் திருக்கைத்தாதையானவர் பரிசுத்ததனத்திலே சம்மனசுகளையும், அர்ச்சியசிஷ்டர்களையும் கதித்துள்ளார்" என்று அர்ச். பிரான்சீஸ் சலேசியார் அறைகின்றார். "உலகவிஷயமாகவோ அன்றேல் ஞான விஷயமாகவோ எந்த அவசியதேவைக்குமாக அர்ச். சூசையப்பரிடம் நான் கேட்டமன்றாட்டு எனக்குக் கிடையாமற்போகவில்லை" என அர்ச். தெரேசம்மாள் அறைகூவுகின்றாள். திருக்குடும்பத்தின் தலைவராய், திருச்சபையின்பாதுகாவலராய், குடும்பங்களுக்குத் தாபரமாய், நன்மரணதாதாவாய், திவ்வியயேசுவினதும், தேவதாயாரினதும் திருக்கரங்களில் அதிபாக்கியமான மரணமடைய வரம் பெற்றவராய், இன்னனமகத்தான மகத்துவம் பொருந்திய இந்தப்பெரிய அர்ச்சியசிஷ்டவரின் அடைக்கலத்தை நாடுவதும், அவர்சலிகையைத் தேடுவதும், புகழைப்பாடுவதும், அவரதுபக்திபரமபப் பாடுபடுவதும் நமக்குப் பெரும்நன்மை பயப்பதாகுமன்றோ?

அர்ச். சூசையப்பரின் பாதுகாவலைநாடினோரை அவர் ஒருபோதுமே கைவிடமாட்டார். அவர்சலிகையைத் தேடினோரை அவர்ஒருநாளுமே வெறுங்கையாய் விடமாட்டார். அதனால் தான் அக்காலத்திலே யாக்கோபுவின்குமாரனை சூசையப்பரைப்பற்றி எகிப்திய பார்வோன்அரசன் சொன்னதுபோல, இக்காலத்திலே திருச்சபையும் யாக்கோபுவின்குமாரனாகிய "சூசையப்பரிடம் போங்கள்" என்று தனதுமக்களைத் தூண்டிவருகின்றது. ஆதலால் நாமெல்லாம் இத்திருமாதவனை நாடிப்போவோமாக! நம்பிக்கையுடன் அவரைத்தேடிப்போவோமாக! ஏனெனில், பரலோகத்திலே அவருக்குள்ளசெல்வாக்கோ மிகப்பெரிது! ஆகவே, என்றென்றும், விசேஷமாய் அவரதுபக்திக்கென்று நேர்ந்துகொள்ளப்பெற்ற இப்பங்குனி மாதத்திலும் அதிகமதிகமாக அவரைப்பக்திசெய்து, அவரைப்போலச் சருவேசுரனுக்குப் பிரியப்படச்சீவித்து, அவரின் உத்தமபக்தர்களாக விளங்குவோமாக!

### தபசுகாலத்தின்
## 1-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(மத். 4 : 1—11)

அக்காலத்தில் யேசுநாதர் பசாசினுல்சோதிக்கப்படுவதற்கு இஸ்பீரீத்து சாந்துவினுல் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார். அவர் அவ்விடத்தில் நாற்பது இரவும், நாற்பதுபகலும் உபவாசமாயிருந்த பின்புபசியுற்[illegible] சோதனைசெய்வோன் அவரிடம் வந்து: நீர் சர்வேசுரனுடையசுதனுனல், இந்தக்கல்லுகள் அப்பமாகும்படிசொல்லுமென்றான். யேசுநாதர் மறுமொழியாக: மனிதன் அப்பத்தினுல் மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய திருவாயினின்று புறப்படுகிற எந்தவாக்கினுலும் பிழைக்கிறான் என்றுஎழுதப்பட்டிருக்கிறதென்றார். அப்போது பசாசு அவரைப் பரிசுத்தநகரத்திற்குத் தூக்கிக் கொண்டு போய்த் தேவாலயச்சிகரத்தின் மேல் அரைநிறுத்தி, அவரை நோக்கி: நீர்சர்வேசுரனுடைய குமாரனுனல், கீழேகுதியும்; ஏனெனில், அவர் உம்மைக் குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்றும், உமதுபாதம் ஒரு வேளை கல்லில் மோதாதபடிக்கு அவர்கள் உம்மைக் கரங்களால் ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதியிருக்கின்றதென்றான். யேசுநாதர் அவனைப்பார்த்து: உன்தேவனுகிய ஆண்டவரைச் சோதியாதிருப்பாயாகவென்றும் எழுதப்பட்டிருக்கிறதென்றார். மறுபடியும்பசாசு அவரைமிகவும் உயர்ந்த ஓர் பருவதத்தின் மேல் எடுத்துக்கொண்டு போய், உலக இராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின்மகிமையையும் அவருக்குக்காண்பித்து: நீர்சாஷ்டாங்கமாகவிழுந்துஎன்னை ஆராதிப்பீராகில் இவையெல்லாவற்றையும் உமக்குத்தருவேன் என்று அவருக்குச்சொன்னுன். அப்போதுயேசுநாதர் அவனை நோக்கி: சாத்தானே, அகன்றுபோ; ஏனெனில், உன்தேவனுகிய ஆண்டவரை ஆராதித்து, அவரொருவரையே செவிப்பாயாகவென்று எழுதப்பட்டிருக்கிறதென்றார். அப்பொழுது பசாசு அவரைவிட்டுப் போகவே, இதோ! தேவதூதர் அணுகி அவருக்குப் பணிவிடை செய்தனர்.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

## அச்சுப்பிரசுர ஞாயிறு

மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் அவர்கள் தமது மேற்றிராசனமுழுவதிலும் நிகழும் பங்குனிமாதம் 9-ந் திகதி அச்சுப்பிரசுர ஞாயிறுக அனுசரிக்கப்பட வேண்டுமென ஆஞ்ஞாபித்திருக்கின்றார். தேவநற்கருணைஎழுந்தேற்றஞ்செய்து அதன்முன்பாகச் சொல்லப்படவேண்டிய செபமானது, "மோக்ஷபாதை"யிலே 383-ம் பக்கத்திலும், "பிரசித்த ஆராதனையின் சாதாரணசெபங்கள்"எனும் செபப்புத்தகத்தின் 237-ம் பக்கத்திலும் இருக்கின்றது. கத்தோலிக்க இலக்கிய பிரசுரங்களைப் பரப்புவதிலே, விசேஷமாய்ச் "சத்தியவேத பாதுகாவல"னுக்கும், "கதலிக் மெசெஞ்ச"ருக்கும் புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதாலே துணைச்செய்யுமாறு குருப்பிரசாதிகளும், கத்தோலிக்கசேவாகுழுவினரும் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். அவர்கள் கத்தோலிக்க இலக்கிய பிரசுரங்களில் (ஆங்கிலம், தமிழ், சிங்களம்) தங்களுக்குத் தேவையானவற்றிற்குக் "கொழும்பு, புறக்கோட்டை, அர்ச். பிலிப்புநேரியார் கோவில் கத்தோலிக்க புத்தகசாலை" அல்லது "யாழ்ப்பாணம், கத்தோலிக்க அச்சியந்திரசாலை" ஆகிய இரண்டில் ஒன்றுக்கு நேரே எழுதிக்கொள்ளலாம்.

## POPE'S DAY

Pope's Day this year will be celebrated in the Diocese of Jaffna on the 9th of March. His Lordship desires that Parish Priests address the faithful on the present needs of the Church, the effort made by the Pope for world peace and offer special prayers for the intention of His Holiness the Pope.

********************

## பாப்பரசர் சுபதினம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே பரிசுத்த பாப்பரசர் சுபதினம் வருகிற பங்குனிமாதம் 9-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோலக் கொண்டாடப்படும். கிறீஸ்துநாதரின் பதிலாளியாய், கத்தோலிக்க திருச்சபையின் பிரத்தியட்ச தலைவராய் இருந்துவருகின்ற பரிசுத்ததந்தை மட்டிலே அவரின் ஞானமக்களாகிய நாம் என்றைக்கும் கொண்டுள்ள குன்றாத பற்றுதலையும், குறையாத கீழ்ப்படிதலையும் அன்று தினமும் பகிரங்கமாகக் காண்பிப்போமாக! மலையேதளரினும் அவர் மனமேதளராது அவ்வளவாக மனுப்பேசித் தூண்டிவருவதும், நம்பிக்கையேதவறாது அவ்வளவாக மன்றாடி வருவதுமான உலகசமாதானத்தை — நீதியை அடிப்படையாகக்கொண்ட நிரந்தர உலகசமாதானத்தை அவரும்நாமும் ஒருங்கே கண்டடையுமாறும், அவரது சுகிர்த கருத்துகள் நிறைவேறுமாறும் அன்றுதினம் விசேஷவிதமாக வேண்டுதல் செய்வோமாக!

********************

## கொழும்புப் பொருட்காட்சி

கவர்னல்—ஜெனறல் சோல்பறி பிரபுவால் சென்ற சனிக்கிழமை காலை 10 மணிக்குப் பெருந்திரளான பிரபலஸ்தர்களும், பிறரும் சமுகமளித்திருக்கப் பெருமித ஆடம்பர வைபவங்களுடன் திறந்துவைக்கப்பெற்ற கொழும் [illegible] காட்சியின் மாட்சியோ வர்ணிக்குந்தரமன்று எனச் செய்தி பரந்திருக்கிறது. இக்காட்சியிலே பதினறுநாடுகள் போட்டியிடுவனபோல் கலந்திருக்குமானல் அதன் சிறப்பை எடுத்துக்கூறவேண்டியதில்லை. முதன் மூன்று நாட்களிலும் மாத்திரம் ஒரு லட்சம் பேர்சென்று அதனைப் பார்த்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஆனல், இந்தக்காட்சி முழுவதும் ஒரு நாள் இரண்டுநாளில் பார்த்துமுடிக்கக் கூடியதன்றென்றும், அக்காட்சியாலே கொழும்புநகரின் சனக்காட்சியும் முன்னில்லா பெரும்கவர்ச்சிகரமானகாட்சியாய் இருக்கின்றதென்றும் கண்டவர்கள் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய நற்கருணையின்பேரில்

## (திரிகோணமலை மேற்றிராணியாரின் தபசுகால நிருபம்)

யேசுக்கிறிஸ்துநாதரில் அன்பார்ந்த சகோதாரே, பிள்ளைகளே! சென்ற காலச் சம்பவங்களைக் கவனித்தால், ஸ்பானியதேசத்தில்உள்ள பார்சலோனு நகரமானது இவ்வருடம் வைகாசிமாதம் 27-ந்திகதி தொடக்கம் ஆனிமாதம் 12-ந்திகதிவரையும் ஓர் ஞான உற்சாகமுள்ள நகரமாய் இருக்கும் எனலாம். எத்திசையிலும்இருந்து அந்நகரத்திற்கு விசுவாசிகள் செல்வார்கள். திருச்சபையின் ஞானஅரசர்களாகிய கருதினல்மார், மேற்றிராணிமாரும், குருமாரும், சந்நியாசிகளும், விசுவாசிகளும் ஆயிரக்கணக்காய் உலகத்தின் ஒவ்வொரு கண்டத்திலும் இருந்து ஸ்பானியதேசத்தின் அந்தப் பழமையான நகரத்தைநாடிச் செல்வார்கள். இந்தக்கவர்ச்சிக்குக் காரணமாய்இருக்கும் வசீகரப்பொருள் திவ்வியநற்கருணையே ஆகும்.

வைகாசிமாதம் 27-ந்திகதியில் இருந்து ஆனிமாதம் 1-ம் திகதிவரையும் பார்சலோனு நகரமானது பலதேசசம்பந்தமான 35-வது சற்பிரசாதமகாநாட்டை உபசரிக்கும் பெரியஉரிமையைப் பெற்றிருக்கின்றது. மேலும் முழுத்திருச்சபையும் முறையானவிதமாய்த் திவ்வியநற்கருணையை ஆராதிக்கும் மையமாகத் தெரிந்துகொள்ளப்பட்டதிலும் ஆனந்திக்கின்றது. அநேகர் தாங்களாகவேவந்து சமுகம் அளிப்பாகள். பெரும்பகுதியாரோவெனில், எண்ணத்தில்மாத்திரம் அங்கு இருப்பார்கள். என்றாலும் இந்தப் பலதேசசம்பந்தமான சற்பிரசாதமகாநாடுகள் மெய்யாகவே சமுகமாய் இருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, திருச்சபையின் எல்லாமக்களுக்கும் பலன்களைக் கொடுக்கும் நோக்கம்உள்ளவை. ஓர் தீபத்தம்பமானது தான் இருக்கும் கரையில் மாத்திரமல்ல, கடலிலும் வெகுதூரம் ஒளிவீசுவதுபோல, சற்பிரசாதநாதரும் தாம் பார்சலோனு நகரத்தின் வீதிகள்தோறும் பத்தியோடு சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டு போகப்படும்பொழுது, தமது ஆசீர்வாதங்களையும், வரப்பிரசாதங்களையும் அங்குவழியில் முழுந்தாளில் இருப்பவர்கள்மேல் மாத்திரமல்ல, ஒவ்வொரு கண்டத்தின்மேலும், தமது இருதய ஆயத்தத்தோடுஇருக்கும் ஒவ்வொரு ஆளின்மேலும் பொழிவார்.

நமது மேற்றிராசனமும் இவ்வருடத்தின் இந்தப்பிரதான சம்பவத்திற்காகத் தன்னைநேராய் ஆயத்தம் செய்யும்படியும், அதன் ஆசீர்வாதங்களில் அதுவும் போதியஅளவு பங்குபற்றும்படியும், இந்தத்தபசுகால ஆயர்நிருபத்தில் நம்துசமயத்தின் பிரதானபரமஇரகசியமும், சருவேசுரனது அன்பின் அதியுந்நத செயலுமாகிய திவ்விய நற்கருணையைப் பற்றிக்கூறுகிறோம்.

### திவ்வியநற்கருணைப் பரம இரகசியம்

யேசுக்கிறிஸ்துநாதரில் மிகவும் அன்பார்ந்த சகோதாரே, பிள்ளைகளே, ஒருபோதும் தேவநற்கருணையைச் சரிவர நேசிக்கவும், அதற்குரியவிதமாய் அதைஆராதிக்கவும் நம்மால்முடியாது. அது சருவேசுரன் நமக்குத்தந்த கொடைகளில் மிகச்சிறந்தது. "அதில் சருவேசுரன் மனிதரில்வைத்திருக்கும் அன்பின் திரவியங்களைச் சொரிகின்றனர்போல் இருக்கின்றது" என்று திரிதேந்துசங்கம்கூறும். (பகு. XII, C. II) உண்மையாகவே அவருடைய இந்த அன்பின் தேவதிரவிய அநுமானத்தில் தம்மையேசொரிந்து நம்மத்தியில் சீவித்தும், சீவியர்தரும் தமது கல்வாரி மலைப்பலியைச் செலுத்திக்கொண்டும் இருக்கின்றனர்.

தேவநற்கருணையில் எழுந்தருளி இருப்பவர் யார்? பெத்லேகக்கெபியில் நத்தார்த்திருநாள் இரவில் நமதுபரிசுத்ததாயார் நமக்குத்தந்த யேசுநாதரே இருக்கின்றனர்; அர்ச். மரியாளுடையவும், அர்ச். சூசையப்பருடையவும் அன்பானபாதுகாப்பில் ஞானத்திலும், வரப்பிரசாதத்திலும், வயதிலும் வளர்ந்தவரும், நம்மை இரட்சிப்பதற்காகச் சிலுவையிற்தொங்கித் தமது திருஇரத்தத்தைச் சொரிந்தவரும் ஆகியஇந்தஆளே திருச்சரீரத்தோடும், திருஇரத்தத்தோடும், திருஆத்துமத்தோடும், தேவசுபாவத்தோடும மெய்யாகவே தேவநற்கருணையில் இருக்கின்றனர்.

நமதுதேவதாய் அவரைக்கண்டது போல நாமும் அவரைக் காணுகிறோமில்லை. ஏனெனில், அவரின்சரீரமானது அங்குஉண்மையாய் இருந்தாலும், அது அப்பத்தின்உடையவும், இரசத்தின்உடையவும் குணங்களுக்குள் மறைந்திருக்கின்றது. குருவானவர் பத்திக்குரிய அர்ச்சிப்புநேரத்தில் அடக்கமாகச் சற்றுக்குனிந்துநின்று அப்பத்தின்மேலும், இரசத்தின்மேலும்: "இது என்சரீரம், இது என் இரத்தத்தின் பாத்திரம்" என்னும் சொற்களை உச்சரிக்கும்பொழுது சருவேசுரன் அவருக்குக் கொடுத்திருக்கும் வல்லபத்தினல் அப்பஇரசங்களின் குணங்களுக்கும், யேசுநாதசுவாமியின் திருச்சரீரத்துக்கும், இரத்தத்திற்கும் இடையிலுள்ள தூரத்தை அழிக்கின்றார். அந்நேரந்தொடங்கிப் பாஸ்குஞாயிறன்று, மரித்தவர்கள் இடத்திலிநின்று உயிர்த்தெழுந்தருளியவரும், பின்னர் தமது மோட்சபிதாவினிடம் எழுந்தருளிப்போனவருமாகிய யேசுநாதசுவாமி மோட்சத்திலும் இருந்துகொண்டு, பாத்திரத்திலும் அப்பக்குணங்களிலும் எழுந்தருளி இருக்கின்றனர். அந்நேரந்தொடங்கி அப்பமும் இரசமும் மாறிவிடுகின்றன. அப்பஇரசங்களின் குணங்கள் மாத்திரம் இருக்க, அவைகளின் தன்மைகள் நமது ஆண்டவரின் திருச்சரீரமாகவும், இரத்தமாகவும் முற்றாய்மாறிவிடுகின்றன. இது மகாபரமஇரகசியம் இதை நம்மால விளங்கமுடியாது. ஆனல், அது உண்மைஎன்று நமக்குத் தெரியும், ஏனெனில், நமது ஆண்டவாகிய யேசுக்கிறீஸ்துநாதர் அதை வெளிப்படுத்தி இருக்கிறார். அவர் முழுச்சத்தியமும், அளவில்லாத ஞானமும் ஆனவர்.


அதேஞானமும், அவர் நம்மில் வைத்திருக்கும் அன்பும் அப்பஇரசக் குணங்களுக்குள் எங்கள்மத்தியில் எழுந்தருளி இருக்கும்படி தூண்டின. இவ்விதமாய் எவ்வளவுஇலேசாக அவரின் சந்நிதானம் ஆயிரந்தரம் மாத்திரமல்ல, பத்திலட்சந்தரமும் பெருக்கக் கூடியதாக இருக்கின்றது. எவ்வளவு வசதியாக அவரை நமது தேவநற்கருணைப் பெட்டிகளில்வைத்துக் காப்பாற்றலாம். வறியவரும் செல்வரும், முதியோரும் இளைஞரும் எல்லோரும் பயமின்றி எவ்வளவு இலேசாய் அவரிடம செல்லக்கூடியதாய் இருக்கின்றது.

நமது ஆத்துமஉணவாய் வரவேண்டும் என்ற அவரின் ஆசையே அவரை ஓர் மெல்லிய அப்பத்துண்டில் நம்மோடு இருக்கும்படி தூண்டிய பிரதான நோக்கமாகும். "நானே பரலோகத்திலிருந்து இறங்கின சீவிய அப்பம். இந்த அப்பத்தில் யாதொருவன் புசிப்பானேயாகில் என்றென்றைக்கும் பிழைப்பான். இனி நான்கொடுக்கும் இந்தஅப்பம் எவ்விதமானது? அது உலகத்தின் சீவியத்திற்காகக் கொடுக்கப்படும் என்மாம்சமே" (அருளப்பர் VI—51—52) சருவேசுரன் மனிதனய் அவதரித்தது ஓர் பெரும் அதிசயமான நிகழ்வு, ஆனல், அவர் தம்மை நமக்கு உணவாகத்தந்தது நம்புதற்கரிய ஓர் செயலாய் இருந்தபடியால், கிறீஸ்துநாதரின் சீஷர்களில் அநேகர் "இது கடினவாக்காய் இருக்கிறது; இதையார் கேட்கக்கூடும்?" என்றார்கள் (அரு. VI—61). "அதுமுதல் அவருடைய சீஷர்களில் அநேகர் பின்வாங்கி, அதன்பின் அவரோடுசேர்ந்து போகாதிருந்தார்கள்." (அரு. VI—67). இன்றைக்கும் தெய்வீகஅன்பின் கருணைநிறைந்த இந்தக்காட்சியானது அநேகருக்குப் பெருந்தடையாய் இருக்கின்றது. இவர்கள் சருவேசுரனின் சருவவல்லபத்தைத் தங்கள் பெலவீனத்தினலும், கிறீஸ்துநாதரது இருதயத்தின் ஆழத்தைத் தங்கள் இருதயங்களின் ஆழமின்மையாலும் அளவிடுகின்றனர். யேசுநாதர் தேவநற்கருணையில் எழுந்தருளி இருப்பதுமன்றி, அதில் முயற்சியோடு எனக்காக மன்றாடிக்கொண்டும், இரட்சணியஅலுவலைச் செய்துகொண்டும் இருக்கின்றனர். அவர் தமது மனிதரூபத்தில் நசரேத்தூர், யேசுநாதராக என்ன செய்தாரோ, அதையே இப்பொழுதுச் சற்பிரசாதரூபத்தில் பரலோகத்திலிருந்து இறங்கிய சீவியஅப்பமாகவும் செய்கின்றனர்.

(தொடரும்)

# PRESS SUNDAY

His Lordship the Bishop of Jaffna has ordered that the 9th of March should be observed as Press Sunday throughout his diocese. The prayer to be said before the Blessed Sacrament exposed is on page 383 of மோக்ஷபாதை or 237 of the பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள். The missionaries and the Catholic Action groups are requested to help in the diffusion of Catholic Literature especially by getting new subscriptions to the ***Sathia Vetha Pathu Kavalan*** and the ***Catholic Messenger***. They may write direct **either** to the "Catholic Book Depot., St. Philip Neri's Church, Pettah, Colombo" **or** to the "Catholic Press, Jaffna" for their requirements in Catholic Literature (English, Tamil and Sinhalese).




## வரப்பிரசாத நவநாள்

## பங்குனி 4—12

அர்ச். பிரான்சீஸ் சவேரியாரை அறிந்தவர்களும், அவருடன் செபத்தினல் ஐக்கியப்பட்டவர்களுமான சகலராலும் அதிகமாக அநுசரிக்கப்படும் ஓர்பத்திமுயற்சி இதுவாகும். இது ஆரம்பமானவிதம் வருமாறு:

யேசுசபையைச் சேர்ந்த வண. மேஸ்திறிலிசுவாமியார் யப்பானியதேச மிஷன்களுக்குச்சென்று வேதம் போதிப்பதாக நேர்த்திசெய்து தமது பிரயாணத்துக்குக் காத்துக்கொண்டிருக்கையில் கடுமையான ஓர்விபத்துக்குள்ளாய் மாணவேதனை அநுபவித்துக்கொண்டிருந்தார். அவர் மாணத்தருவாயில் இருக்கும்போது, அர்ச். பிரான்சீஸ் சவேரியார் அவருக்குத்தரிசனையாகி, யப்பானுக்குச் செல்வதாக முன்னே அவர் செய்துகொண்ட வாக்குத்தத்தத்தைப் புதுப்பிக்குமாறுகற்பித்து, அவரைநோக்கிச் சொல்லுவார்:

"பங்குனிமாதம் 4-ந் திகதி முதல் 12-ந்திகதி முடிகிறவரையிலே தொடர்பாக ஒன்பதுநாட்களுக்கு எனது சலிகையை இரந்து, அந்தஒன்பதுநாட்களிலே ஒருநாள் நல்லபாவசங்கீர்த்தனஞ்செய்து, திவ்விய நற்கருணை பெறுகிறவர்கள்எல்லாரும் எனதுபாதகாவலைப் பெற்றுத் தங்கள்ஆத்துமங்களின் மேலானநன்மைக்கும், சர்வேசுரனின்மகிமைக்குமாகத் தாங்கள் கேட்கிற எந்தவரப்பிரசாதத்தையும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்வார்களென முற்றும்நிச்சயமாக நம்பியிருக்கலாம்." வண. மேஸ்திறிலிசுவாமியார் குணமடைந்தார். யப்பானியதேசஞ்சென்று, அங்கே வேதம் போதித்து வரும்போது ஓர் வேதசாட்சியாக மரணமடைந்தார். அவர் யப்பானுக்குப் புறப்படுமுன் தாம் புதுமையாகக் குணமடைந்த செய்தியையும், அநுகூலந்தரும் இந்தவரப்பிரசாத நவநாளைச்செய்கிறவர்களுக்கு அவ்வர்ச்சியசிஷ்டர் அருளியவாக்குத்தத்தத்தையும் பாக்கப் பிரசித்தஞ் செய்யலாயினர். இந்தநவநாள் இப்போது எங்குமே பிரஸ்தாபம்பெற்று, அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் பக்தர்கள் இதனைமிகுந்த பயபக்தியுடன் அநுசரித்துவருகின்றார்கள்.

நல்லூர், அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின்கோவிலிலே பங்குனிமாதம் 4-ந் திகதிமுதல் 12-ந் திகதிவரையில் இந்த நவநாள் வழமைபோலப் பத்திச்சிறப்பாய் நடத்தப்படும். நமது உபகாரிகள், அநுதாபிகள், அன்பர்கள்அனைவரும் இதிற் கலந்துகொள்ளவேண்டுமென நாம்ஆசிக்கின்றோம். நேரே சமுகந்தரமுடியாதவர்கள் ஞானவிதமாக நம்முடன் சேர்ந்துகொள்வார்களென நம்புகிறோம்.

இந்தநவநாள் நடைபெறும் காலத்திலே நமதுஉபகாரிகள் அனைவருக்காகவும் அதிகம்விசேஷவகையாய் மன்றாடுவது நம்முடையவழக்கமாகும். அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின்பக்தர்கள் தங்கள் விணணப்பங்களையும் நமக்கு அனுப்பிவைக்கின்றார்கள். நவநாளின் போது நாம்அவைகளை அர்ச்சியசிஷ்டரின்பாதத்தில் ஓர்விசேஷ தட்டிலே வைக்கின்றோம்.

வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

### றோமையில் சுதந்திரவிழா

றோமைநகரிலே சஞ்சரித்துவருகின்ற இலங்கைமக்கள் இலங்கைப் பிரதிநிதியாக அங்கே இருந்துவருகின்ற திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன அவர்களைத் தலைமையாகக்கொண்டு இலங்கைச் சுதந்திரதினவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அன்றுகாலை விசுவாசப் பரப்புதற்சபைக் கல்லூரிச் சிற்றாலயத்திலே லங்காநாயகிக்குத் தோத்திரமாகத் திவ்வியபூசைப்பலி நிறைவேறியது. அதற்குத் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன அவர்கள் தமது அந்தரங்க காரியதரிசியுடனும், தமது காரியாலயத்தைச் சேர்ந்த ஏனையஅங்கத்தவர்களுடனும் சமுகமளித்திருந்தார். பூசையின்போது சிங்களத்திலும், தமிழிலுமாகக் கீழைத்தேச இராகங்களில் சமயோசிதமாக இயற்றப்பட்ட கீதங்கள் படிக்கப்பட்டன. பின்பு ஓர் வரவேற்பு உபசாரம் நடைபெறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

(1) இங்கிலாந்திலே பிரசித்திபெற்ற வோண் (Vaughan) குடும்பத்தைப்பற்றிய புகழ்ச்சிக்குரிய சம்பவம் யாது?

இந்தக்குடும்பத்தில் உதித்த 13 பிள்ளைகளில் 11 பிள்ளைகளும் குருமாரும், கன்னியாஸ்திரீமாரும் ஆயினமையே. இவர்களின் தாயார் ஒவ்வொருநாளும் திவ்வியநற்கருணைமுன்பாக ஒருமணிநேரம்முழந்தாட்படியிட்டிருந்து தனதுபிள்ளைகள்எல்லோரையும் தேவதொண்டுக்குத் தெரிந்துகொள்ளும்படியாகச் சருவேசுரனைப் பார்த்து உருக்கமாகமன்றாடிவந்தார். அதன்விளைவாக அவரதுஐந்து புதல்விகளும் ஒருங்கே கன்னியாஸ்திரீமாராஞர்கள். எட்டுப்புதல்வர்களில் ஆறுபேரும் குருமாராஞர்கள். இப்புதல்வர்களில்ஒருவர் பிரபலம்பெற்ற கருதினல்வோண்ஆண்டவர். மற்றொருவர் வோண்மேற்றிராணியார். இன்ஞெருவர் பிரசித்திபெற்ற பிரசங்கியாரான வோண்சுவாமியார். இதிலிருந்து விளங்கவேண்டியதென்ன? தொட்டிலிலிருந்தே தேவஅழைத்தல் வழமையாக உண்டாகின்றது என்பதே. பிள்ளைகளைக் குருமார் அல்லது கன்னிகாஸ்திரீமாராக உருவாக்குவது பெற்றோரிலேயேதங்கியிருக்கின்றது. இவர்களுக்கெல்லாம் வோண்அம்மையார் உயர்ந்த முன்மாதிரிகையாக விளங்குகின்றார்.

(2) பேதுருவானவர் (பீற்றர்) எனும் நாமத்துடன் எத்தனைபாப்புமார் திருச்சபையை ஆட்சிசெய்திருக்கின்றனர்?

ஒரேயொருவர்தான். அப்போஸ்தலரான அர்ச். பேதுருவானவருக்குப்பின் மற்றெந்தப்பாப்பானவராவது அந்தப்பேரை வகிக்கவில்லை.

(3) 'அட் லிமினு' (ad limina) தரிசனையென்றால் அர்த்தம்என்ன?

மேற்றிராணிமார் தங்கள் மேற்றிராசனங்களைப்பற்றிப் பரிசுத்தபாப்பரசருக்கு அறிக்கையிடுமாறு காலத்துக்குக்காலம் ரோமாபுரியைப்போய்த்தரிசிப்பதேயாகும்.

(4) இந்தியாவிலே தற்போது எத்தனை அதிமேற்றிராசனங்களும், மேற்றிராசனங்களும இருக்கின்றன?

10 அதிமேற்றிராசனங்களும், 40 மேற்றிராசனங்களும் இருக்கின்றன. இவற்றிலே 5 அதிமேற்றிராசனங்களும், 20மேற்றிராசனங்களும் இந்திய அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களால் பரிபாலனஞ்செய்யப்படுகின்றன. இந்தியாவிலே தொண்டாற்றிவருகின்ற 5,200 குருமாருள் ஏறக்குறைய நூற்றுக்கு 70விகிதமானோர் இந்தியர்களே.

(5) திருச்சபையிலே எட்டுநாட்களாகக் கொண்டாடப்பட்டுவரும் அதிவிசேஷப்பட்ட திருநாட்கள்எவை?

நத்தார்த்திருநாள், மூவிராசாக்கள் திருநாள், பாஸ்குத்திருநாள், கர்த்தரின் ஆரோகணத்திருநாள், இஸ்பிரீத்துசாந்து திருநாள், தேவநற்கருணைத்திருநாள்என்பனவே. இவைகள் அந்தந்தத் திருநாளிலும், அதனைத்தொடர்ந்துவரும் ஏழுநாட்களிலுமாக எட்டுநாட்களாகக் கொண்டாடப்படுகின்றன.

(6) 12-ம்பத்திநாத பாப்பரசர் ஓர் சங்கீதப்பிரியரா?

ஆம், அவர் ஓர்சங்கீதப்பிரியர் மாத்திரமல்ல, சங்கீதவித்வானுமாவர். அவர் ஓர்குருவாக வந்தபின் அநேகவருடங்களாகச் சங்கீதவிழாக்களுக்கு அதிகம்அடிக்கடிபோகும் வழக்கமுடையவராய் இருந்தார். அவர் வயலின் எனும் வாத்தியக்கருவியை நன்றாகவாசிக்கிறார். தமதுவாலிபப்பிராயத்திலே அனுதினமும் அவர் அதனைவிடாமற்பயிலும் வழக்கமுள்ளவராய் இருந்தார். தாம் ஓர்ஸ்தானீகராய் இருந்துவந்த மூனிச்,

## பொது வர்த்தமானம்

### ஸ்ராலின் எழுதிய புத்தகங்கள்

ருஷியசர்வாதிகாரியான ஸ்ராலின் எழுதியவைகளாய்ப் போலாந்திலே சென்றவருடம் அச்சிடப்பெற்ற 59 லட்சத்து 45 புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றுடன் 50 லட்சம் கம்யூனிஸ்த புத்தகங்களும், துண்டுப்பிரசுரங்களும் போலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனல், இந்தப்புத்தகங்களைத் தேவைப்படுவாரும், விரும்பி வாங்குவாரும் இல்லை. அவற்றிலே பெருந்தொகையை எடுக்குமாறு புத்தகக்கடைகளும், நூல்நிலையங்களும் பலவந்தஞ்செய்யப்படுகின்றன. தங்களது பிரசுரங்களின் பெரும்பிரவாகத்தாலே இளஞ்சந்ததிகளைத் தங்கள்செல்வாக்குக்கு உட்படுத்திவிடலாமெனக் கம்யூனிஸ்தார்கள் நம்புகின்றார்கள். விற்பனைக்கிருக்கும் புத்தகங்களின் அட்டவணையிலே காற்மாக்ஸ், என்ஜெல்ஸ், லெனின், ஸ்ராலின்என்பவர்கள் எழுதியபுத்தகங்கள்தவிர, 700 கம்யூனிஸ்த புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்களுக்கு மேல் இருக்கின்றன. அவற்றிலே ஸ்ராலினின்எழுத்துகளையும், பேச்சுகளையும்கொண்டனவாய்ப் போலிஷ் பாஷையில் பிரசுரஞ் செய்யப்பட்ட பதின்மூன்றுபுத்தகங்கள் இருக்கின்றன.

### ஒருதவளையால் எட்டுப்பேர்

திருவனந்தபுரத்திலே ஓர்கிணற்றில் இருந்த தவளையொன்று எட்டுப்பேரின் உயிருக்கு உலைவைத்திருக்கின்றது. அங்கு தேங்காய்ச்சிரட்டைகளை எரித்துக்கொண்டிருந்த ஆறுபேர் ஓர் கிணற்றிலிருந்து தண்ணீர்அள்ளுவதற்காகச்சென்றார்கள். சென்றதும் அக்கிணற்றுத் தண்ணீரின்மேல் ஓர்செத்த தவளை மிதந்துகொண்டிருக்கக் கண்டார்கள். அப்போது அவர்களில் ஒருவன் அதை வெளியேஎடுப்பதற்காகக் கிணற்றில் இறங்கினன். ஆனல், உள்ளேவிழுந்து நீரில் அமிழ்ந்திப் போயினன். அப்போது அவனை வெளியே தூக்கிவிடமுயன்று ஏனையோருள்மூவர் இறங்கியபோது அவர்களும் நீருள் மூழ்கினர். அதற்கிடையில் எஞ்சியஇருவரும் இட்டகூச்சல் கேட்டும், அயலிலிருந்த ஓர் கோவில் மணி அடித்தசத்தங்கேட்டும் அவ்விடத்திலே ஓர்சனக்கூட்டம் வந்து கூடிவிட்டது. அவர்களிலும்நால்வர் அவர்களை நீரிலிருந்துமீட்க முயன்றபோது பாவம் அவர்களும் அக்கிணற்றிற்குப் பலியானர்கள்.

### பாதுகாப்புச் செலவு

ருஷியாவின் படையெடுப்பிலிருந்து ஐரோப்பியநாடுகளைப் பாதுகாத்துவைப்பதற்கென நிறுவப்பட்டுள்ள வடஅத்திலாந்திக் ஒப்பந்தஸ்தாபனத்தில் சேர்ந்துள்ள பன்னிருநாடுகளும் இவ்வருடத்திலே தங்கள் பாதுகாப்புக்கென்று எண்ணூயிரகோடிக்கும், ஒன்பதாயிரகோடிக்கும் இடைப்பட்ட தொகையான டலர்கள் செலவுசெய்யவிருக்கின்றன. ஆனல், சென்ற 1951-ம்ஆண்டிலே அவைகள் ஐயாயிர கோடிக்கும், ஆறாயிரகோடிக்கும் இடைப்பட்ட தொகையான டலர்களும், 1950-ம் ஆண்டிலே நாலாயிர கோடிக்கும், நாலாயிரத்து ஐஞ்ஞூறு கோடிக்கும் இடைப்பட்ட தொகையான டலர்களும் செலவிட்டுள்ளன. இவ்வருடம் வடஅத்திலாந்திக் சேனைக்கு ஆயுதங்கள் உதவுவதையே அமெரிக்கஅரசு முதன்மையாகக் கவனிக்கவிருக்கிறது.

---

பேர்ளின்நகர்களில்தானும் அவர்தாமாகவே சிறந்தகாவியசங்கீதங்களை எப்போதும் வாசித்துவந்தார். கீர்த்திவாய்ந்த சங்கீத வித்துவான்களின் கோஷ்டிகளை [illegible] லாம் ஆனந்தமடைவார்.

## நானசங்கதிகள்

—ஏனையநாடுகளிற்போலவேபிரான்சிலும் மக்கள் வசிப்பதற்குப்போதிய வீடுகள்இல்லாத் திண்டாட்டம் அதிகமாயிருக்கிறது. சென்றமகாயுத்தம் முடிந்தபின் இதுவரையில் அங்கு 1,50,000 வீடுகள் புதிதாகவும், திரும்பவும் கட்டப்பட்டிருக்கின்றன. என்றாலும் அங்கு வீடுகளில்லாக்குறை நீங்கவேண்டுமானல், வருடம் ஒன்றுக்கு 3,20,000 வீடுகளாக மூப்பது வருடம் கட்டிக்கொண்டுபோகவேண்டுமாம்.

— அயர்லாந்திலே இளங்குருமாருக்கு உதவிசெய்வதற்கென இருந்துவருகின்ற அர்ச். சூசையப்பர்சபையிலே தற்போது 68,000 ஐரிஷ்அங்கத்தவர்கள் இருந்துவருகின்றார்கள். இந்தச்சபை இதுவரையிலே 400 குருமார்வரையில் குருப்பட்டம் பெறுவதற்கு உதவிசெய்திருப்பதாக அதன் தலைவரான வண. எம். குயின்லன் சுவாமியார் கூறுகின்றார்.

— கம்யூனிஸ்த ஆதிக்கத்தில் இருந்துவருகின்ற பன்னிருநாடுகளிலும் கம்யூனிஸ்தஅதிகாரிகள் ஏறக்குறைய நூறுகத்தோலிக்க மேற்றிராணிமார்களைச் சிறைவைத்தும், நாடுகடத்தியும், மேற்றிராசனங்களைவிட்டு வெளியேற்றியும்விட்டிருப்பதாக 1952-ம் ஆண்டிற்குரிய வத்திக்கான் அறிக்கைப்புத்தகம் தெரிவிக்கிறது.

— யப்பானிய அரசு வத்திக்கானிடமாகத் தனதுஸ்தானீகர்ஒருவரை அனுப்பிவைக்க ஓர்முன்னுயத்தமாக ரோமைநகரிலே அவரது காரியாலயத்திற்கென்று ஏலவே ஓர்கட்டிடத்தை விலைக்குவாங்கியிருக்கிறது. பரிசுத்தஸ்தானமும் யப்பானிடமாகத் தனதுஸ்தானீகரை அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகளைச்செய்துவருகின்றது.

— அயர்நாட்டிலே லாறுங்எனுமிடத்தில் சமீபத்திலே திரு. மாட்டீன் குயிக்லிஅவர்கள் தமது 90-ம்வயசில் காலஞ்செல்லலாயினர். வாலிபப்பிராயமுதல் இவர் ஓர்குருடராயிருந்தபோதிலும் தனது சீவியத்தில் ஓர்ஞாயிற்றுக்கிழமையாவது திவ்வியபூசைகாணத் தவறியதேயில்லை. ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமையும் இவர் தனதுவீட்டிலிருந்து நான்குமைல்தூரம் நடந்துசென்று திவ்வியபூசைகண்டுவந்தார்.

— இதுவரை அமெரிக்கஐக்கியதேசம் தான்கண்டுபிடித்துச்செய்தநவீனமாதிரியான அணுசக்திஆயுதங்களைத் தனிப்பட்டஇடத்தில் பரிசோதனை செய்தது. இப்போது பிரித்தானிஅரசு தனதுஅணுச்சக்திஆயுதங்களை ஆஸ்திரேலியாவில் பரீட்சிக்க ஆயத்தப்படுகின்றது. பிரித்தானியின் இப்புதியஅணுச்சக்திஆயுதங்கள் அமெரிக்கவிஞ்ஞானிகளையே பிரமிக்கச்செய்யலாமென்று சொல்லப்படுகிறது.

—கிளாஸ்கோவைச்சேர்ந்த குறேய் எனும்சிறிய சுரங்கக்கிராமத்திலுள்ள கத்தோலிக்க இல்லங்களில் ஏறக்குறையஒவ்வொன்றுமே வாரந்தோறும் ஓர்கத்தோலிக்க பத்திரிகை வாங்கிவருகின்றது. அங்கு மரியாயின் சேனையார் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியே இதற்குக்காரணம். பத்திரிகைகளைக் கொண்டுபோய்க்கொடுப்பதில் அங்குள்ள திருச்சிலுவைப்பாடசாலைமாணவிகள் வேண்டியஉதவிசெய்கின்றார்கள்.

— யுத்தம்முடிந்ததுமுதல் ஆஸ்திரேலியாவில் ஆறுலட்சம் சனங்கள் போய்க்குடியேறியிருக்கிறார்கள். சென்றவருடம்மாத்திரம் அங்கு 1லட்சத்து 33 ஆயிரம் சனங்கள்சென்று குடியேறினர்கள். வருடம்ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ஒன்றரைலட்சம் சனங்கள்வீதம்போய்க் குடியேறாவிடின் அந்நாட்டின்விருத்தி வெகுவாகப் பாதிக்கப்படுமென்று அதற்குப்பொறுப்பாளியான மந்திரியார்கூறுகின்றார்.



## 2-ம் வருட மரண ஞாபகம்

ஆண்டுஇரண்டு கழிந்தோடி மறைந்த
தன்றே
ஆருயிரே! அன்னையரே!! கவலைமேலும்
ஈண்டேழுதலையோ பிரிவால் மக்கள்
என்றுமே கவலையினுள் மூழ்கின்றேமே

என்றும் எங்கள் நினைவைவிட்டு அகலாதவிதமாக எங்களைநேசித்து வந்தவவும், சிறந்த நற்குணசீலியாய் விளங்கியிருந்தவவுமான நேசமனைவியும், அருமைத்தாயாருமான திருமதி. அந்தோனியாப்பிள்ளை இராசமுத்து சூசைப்பிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்த ஈராண்டுகள் நிகழும் 7-3-52-இல் பூர்த்தியாவதால் அன்றுதினம் காவலூர் அர்ச். சூசையப்பர்ஆலயத்தில் அன்னவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிறைவேறவிருக்கும் திவ்விய பூசைப்பலிக்கு இனசனரையும், மற்றும் நண்பர்களையும் சமுகமளித்து, அவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுநிற்கிறோம்.

இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளையும், சங். சந்நியாசர் கன்னியாஸ்திரிகளையும் அவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் மனமுருகி வாடிவருந்தும்
நேசகணவரும், பிரியபுதல்விகளும்,
அருமைப்பேரப்பிள்ளையும்,
மருகனும்.

**R. I. P.**

---

## 7-ம் வருட மரண ஞாபகம்

வயது: 62

பிறப்பு: 2—2—1883 இறப்பு: 2—2—1935

எங்களை அத்தியந்த அன்புடன் நேசித்தவரும், எனதருமைத் தந்தையருமாகிய K. மரியான்தம்பி (அர்ச். இஞ்ஞாசியார் பங்கைச்சேர்ந்தவர், கல்லடி முகத்துவாரம், மட்டக்களப்பு.) பரலோகபிராப்தியான ஏழாம் வருடம் 2-2-52-இல் பூர்த்தியடைந்தபடியால் இதைக்கண்ணுறும் சகல கிறீஸ்தவர்களும் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் கருணையோடு வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளும்

புதல்வன்
K. M. சுவக்கீன்
சிவில் ஆஸ்பத்திரி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

அருமைப் பிறவிகளே!

எங்கள் பரிசுத்தபிதா பன்னிரண்டாம் பத்திநாதரை உங்களுக்குத் தெரியும் அல்லவா? அவருடைய சுபதினம் பங்குனி 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. "தந்தை சுபதினம் மைந்தர் மகிழ்தினம்" என்று சொல்லுவார்கள். அன்று, எங்கள் நேசத் தந்தையின் மட்டில் உங்களுக்குள்ள அன்பையும், அபிமானத்தையுங் காட்டி, அவருக்காக மன்ருடிக் கொள்ளுங்கள்.

"அதுதான் நல்லது" என்ற கதையைப் பூர்த்தி செய்யக் குழந்தைகள் காட்டுகிற ஆர்வம் கொஞ்சம் அல்ல. இவைகள் எல்லாவற்றையும் வாசித்து, ஆராய்ந்து, முடிபு சொல்வது இலேசான கருமமா? ஆகையால் மனஞ் சோராமல் காத்திருங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு

### கங்கேரி தேசத்தின் பிதா
## அர்ச். முடியப்பர்

அர்ச். முடியப்பர் 977-இல் பிறந்தார். இவர்தகப்பன் கேஸா என்பவர். மனந் திரும்பியவர். இருபது வயதில் மகியார் என்பவர்களின் அரசனுனர். இரண்டாவது அர்ச். என்றி அரசரின் சகோதரி கிசெல்லாவை மணஞ் செய்திருந்தார். அவளே அவ்விராச்சியம் முழுவதும் மனந் திரும்புவதற்கு வழியா யிருந்தாள்.

கிறீஸ்துநாதரைக் கங்கேரி தேசத்திற்குக் கொடுத்துக் கங்கேரிதேசத்தைக் கிறீஸ்துநாதரின் பாதத்திற் சேர்க்க அர்ச். முடியப்பர் விடாமுயற்சி செய்தார். அவர் செய்த முயற்சிக்கும் இப்போது அங்குள்ளார் செய்யும் அழிவிற்கும் பாரதூர வித்தியாசம்.

அர்ச். முடியப்பர் சிம்மாசன மேறிய பொழுது, அவிசுவாசமும், பொய்த் தெய்வ வழிபாடும் கதித்துப்போய் இருந்தன. அப்பொழுது சில்வேஸ்தர் பாப்புவுக்குச் செய்தி அனுப்பித் தம்முடைய இராச்சியத்திலுள்ள பதினெரு பிரிவுகளுக்கும் மேற்றிராணிமார்களையும், குருமாரையும் தரும்படி கேட்டார். வேதபோதக வேலை துரிதமாக நடக்கும்படி எம்பிரதோருக்கு அரசபட்டம் வழங்கினுர் பாப்பாண்டவர். கிறீஸ்துநாதரை அறியாதஇடங்களுக்கெல்லாம் மிஷனரிய குருமாரையும், சந்நியாசிகளையும் அனுப்பிக் கோயில்களும், மடங்களும் ஸ்தாபித்தார்.

அர்ச். முடியப்பர் தமது இராச்சியத்தைத் தேவமாதாவின் பாதுகாவலில் வைத்து, அவர் மோட்சாரோபணமான தினத்தை எப்போதும் பத்தியோடு கொண்டாடிவருவார். தமது பிரசைகளின் நலனுக்காக நல்லொழுங்குகளையும், நீதிச் சட்டங்களையும் ஏற்படுத்தலானுர். அவர் பேச்சிலும், செய்கையிலும் கிறீஸ்துநாதருடைய எண்ணம் பொதிந்திருக்கும். அதிலை அவர் முயற்சிகள் யாவும் பலனளித்தன.

திருச்சபையின் விருத்தியைப் பற்றி எப்போதும்அவர்கவலையாய்இருப்பார். சாகும் தருணத்திலே தமது இராச்சியத்தில் இருந்த மேற்றிராணிமாரையும், பிரபுக்களையும் அழைத்துத் தமக்குப்பின் யாரைக் கங்கேரி தேசத்திற்கு அரசராகத் தெரிய வேண்டும் என்று அவர்களுக்கு அறிவித்து, அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். ஈரிலைப் பூண்டு போன்று இருந்த இளம் திருச்சபையைப் பாதுகாக்கும் படியும், நீதி, நேசம், தாழ்மை, திருச்சபைக்குக் கீழ்ப்படிதல் முதலிய புண்ணியங்களை அனுசரிக்கும்படியும் புத்தி புகட்டினுர். தம்மையும், தமது பிரசைகளையும் தேவபாராமரிப்பில் ஒப்படைத்து மாணிக்கலானுர்.

கிறீஸ்துநாதரின் நேசம் பொருந்திய செங்கோலை அறிந்த கிறீஸ்துவ நாடாகிய கங்கேரி இப்பொழுது கடவுளை மறுதலிக்கும் நிரீச்சுர வாதிகளின் காலின்கீழ் மிதிபடுவதைக் காணுவது பரிதாபமே! கங்கேரி தேசத்தார் தங்கள் பரிசுத்தஅரசரை நினைந்து கொள்ளாமல் இல்லை. அவர்கள் படும் அவஸ்தையை நாங்களும் நினைந்து கொள்ளுவோம்.

## நீங்களும் அப்படிச் செய்வீர்களா?

1. புஷ்பம் இந்தத் தபசுகாலத்தில் திவ்விய யேசுவின் உபவாசத்தை நினைத்து, இடைநேரங்களில் சாப்பிடாமல் விடுவாள்.

2. ஜெயமணி திவ்விய யேசுவின் பாடுகளைக் குறித்து இந்தத் தபசு காலத்தில் வாரம் ஐந்து தரம் நாட்பூசை கண்டு, இரண்டுதரம் சிலுவைப்பாதை முயற்சியும் செய்வாள்.

3. தேவரத்தினம் பாப்பாண்டவருடைய கருத்துகள் நிறைவேறும்படி ஒரு செபமாலை ஒவ்வொரு நாளும் தபசுகாலத்தில் ஓதி வருவாள்.

4. மரியநாயகம் தன் விளையாட்டைக் கொஞ்சம் குறைத்து வீட்டில் உதவி செய்து கொடுப்பான்.

5. பாக்கியரத்தினம் அர்ச். முடியப்பரைப் பின்பற்றி விசுவாசம் பரம்பவும், பொதுவுடைமைஅழியவும்தேவமாதாவிடம் மன்ருடி, நாள்தோறும் ஒரு காரணிக்கஞ் சொல்லி வருவாள்.

## மரணவேளை

வழக்கம் போல் அன்று மாலையும் நான் அந்த முதியவரைச் சந்தித்தேன். அவருடன் உரையாட எனக்கு அலாதிப் பிரியம். ரசமான கதைகள் சொல்வார். முதலில் அவரைப் பேசத் தொடக்குவது தான் என்னுடைய வேலை.

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆதலால் செபமாலையும் கையுமாகக் காட்சி அளித்தார் கருணைநிதி. அது தான் அவருடைய பெயர். இன்று அவரிடம் தேவமாதாவைப்பற்றிக் கேட்டறிதலே நலமென்று எண்ணி, "தாத்தா! நீங்கள் பரம்பரைக் கிறீஸ்தவரா?" என்று கேட்டேன்.

"இல்லை மகனே! நான் கிறீஸ்தவனுகி இப்பொழுது இருபது வருடங்கள் ஆகின்றன. எப்படிக் கிறீஸ்தவன் ஆகினேன் என்பது ஓர் பெரிய கதை" என்று சொல்லும் போது சுருங்கிய அவர் முகத்தில சோதியின் ஒளிவீசியதைக் கவனித்த நான் "தாத்தா, அதைத்தான் சொல்லுங்களேன்" என்று ஆவலாய்க் கேட்டேன். அவர் சொல்லத் தொடங்கினுர்.

"மகனே! இருபது வருடங்களுக்கு முன் நானும், எனது நண்பன் ஞானமும் ஒருநாள் மாலை மருதமலையினின்றும் இறங்கிக் கொண்டு இருந்தோம். சூரியன் மறையும் நேரம். இயற்கை அன்னை மிகவும் அழகாகக் காட்சி அளித்தாள். நாங்கள் அன்று சமய சம்பந்தமாக வாய்ப்போர் செய்து கொண்டே வந்தோம். ஞானம் விஷய அடக்கம் உள்ளவன். நான் வாயாடி. போரில் எனக்குத்தான் வெற்றி.

"முன்னே சென்றுகொண்டிருந்த ஞானம் ஏதோ சொல்வதற்காகத் திரும்பினுன். அவன் கால் சறுக்கி விட்டது. ஆம், அவன் உலக வாழ்க்கையி னின்றும் சறுக்கி விட்டான். அடுத்த நிமிடம் அவன் உடல் இருநூறு அடிக் கப்பால் ஓர் பள்ளத்தாக்கில் காணப்பட்டது."

"ஐயோ! தாத்தா!" என்று நான் அலறி விட்டேன்.

"உடல் மாத்திரம் அல்ல, உயிரும் கூடத்தான் சென்றது."

"அப்படியென்ருல் அவர் மரிக்கவில்லை என்று சொல்லுங்கள்."

"அவசரப் படாதே மகனே! மிகுதியையும் கேள்; நான் அவன் அருகிற் சென்று முழந்தாளில் இருந்தபடியே அவன் தலையை மடிமேல் வைத்துக் கொண்டிருந்தேன். இரண்டு மூன்று தடவை வாயைத் திறந்தான். மிகுதி நேரம் எல்லாம் மாதாவை நோக்கி மன்ருடினுன். 'கருணு! குருவானவர் ஒருவர் என் அருகில் இருந்தால்' என்று முனகினுன். இச் சொற்கள் என் இதயத்தில் ஆழ்ந்து தைத்தன. நான் என்ன செய்வேன்? இருள் சூழ்ந்த நடுக்காட்டில் குருவானவரை எங்கு தேடுவேன். அவனை விட்டுச் செல்லவும் முடியாது.

"தேவ தாயே எனக்கு ஒரு குருவானவரை அனுப்பும்; எனக்காக மன்ருடும்; என்னுடைய மரண நேரத்திலும் என்னைக் காத்து இரட்சியும்" என்று மன்ருடினுன் ஞானம்.

நான் கேட்டறியாத இச்செபம் எனக்கு ஆன்ம ஈடேற்றப் பாதையைக் காட்டிற்று. இருளும் பயமும் மேலோங்க என்மனமும் இச்செபத்தை இடைவிடாது உச்சரித்தது.

நேரம் செல்லச் செல்ல ஞானத்தின் உணர்வு குன்றிக் கொண்டே சென்றது. ஆனுல், அவன் செபம் குன்றவில்லை. அவன் சொன்னதை நானும் சொன்னேன். மரணப் பள்ளத்தாக்கைப் பார்த்து ஓலமிட்டேன். என்னுடைய சத்தம் கேட்டுக் குருவானவர் ஒருவர் வந்தார். ஞானம், அவரின் முகத்தை நோக்கினுன். "அவர் ஒரு பொழுதும் தவறமாட்டார் என்பதை நான் அறிவேன்" என அனுங்கினுன். "யார்?" என்று குருவானவர் என்னைக் கேட்டார். தேவதாய் என்றேன்.

"ஞானத்தின் இருண்ட மரணப் பாதைக்கு விளக்கேற்றி வைத்தார் குருவானவர். அவரைவிட இதை யாரால் ஆற்ற முடியும்?"

"மகனே! அன்று முதல் நான் உண்மைக் கிறீஸ்தவன். அந்தக் குருவானவரே எனக்கு ஞானஸ்நானம் தந்தார். தேவதாயார் எனக்கு ஞானவெளிச்சம் அருளினுர். அவர் என்னை மரண பரியந்தம் இரட்சிப்பார்" என்று தாத்தா கதையை முடித்தார்.

நன்ருக இருட்டி விட்டது. நான் ஞானம் சொல்லிய செபத்தை மீட்டபடியே வீட்டை நோக்கி விரைந்தேன்.

நெடுந்தீவு — கரம்

## பொழுது போக்கு

நீதிபதி— சுப்பு, நீ ஓர் தங்கக்கடிகாரத்தைத் திருடி விட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிருய். தெரிகிறதா?

சுப்பு— இல்லை, சார், அதுமுழுப் பொய். முதலாவதாக நான்திருடவேயில்லை. இரண்டாவதாக, அது ஒருதங்கக்கடிகாரய்அல்ல. இதுஉண்மைசார்.

* * *



4-ம் வருட
## மரண ஞாபகம்

இலங்கைஅரசாங்க புகையிரதப் பகுதியில் கடைசியாக கிறேற்வெஸ்ரேன் புகையிரதஸ்தான அதிபராகக் கடமையாற்றிய மாதகல், சீ. ஆரோக்கியநாதன்அவர்கள் தமது 45-வது பிராயத்தில் பரலோக பிராப்தியான 4-வது வருடம் பங்குனிமாதம் 6-ந் திகதியோடு பூர்த்தியாகின்றது. அன்றுகாலை மாதகல் அர்ச். தொம்மை அப்போஸ்தலர் ஆலயத்தில் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஓர் துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் குருக்கள், சந்நியாசிகள், கன்னியர், இனபந்துக்கள், சிநேகிதர் அவரது ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்வார்களாக.

ஆ. மரியநாயகி
மாதகல்


### சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.


கணவர்—(மனைவியைநோக்கி)என்ன, இன்று உன்முகம் நல்லாய்இல்லை. ஏதோ கவலைகொண்டவளாய்க் காணப்படுகிருயே.

மனைவி — நாங்கள் பிள்ளைபோலச் செல்லமாய் வளர்த்தநாய் காணுமற் போய்விட்டது. அதை நினைக்கும் போது கவலைகவலையாய் வருகிறதே.

கணவர்— அப்படியானுல் புதினப் பத்திரிகைகளில் விளம்பரம்செய்து பார்க்கிறது நல்லது.

மனைவி—அப்படிச்செய்யலாம்தான். ஆனுல் எங்கள்நாய்க்கு எழுதப் படிக்கத்தெரியாதே.

* * *

இச்சம்பவம் திரு. ஸ்ரீபின் கிங்ஹால் அவர்கள் நடத்திவரும் "தேசீய செய்திக் கடிதம்" எனும்பத்திரிகையிலே ஓர் "மனுேகற்பித பேட்டி" எனும் தலையங்கத்துடன் வெளிவந்திருக்கிறது. இந்தவேடிக்கையான பேட்டியை வாசகர்கள்படித்து ரசிப்பார்களாக.

வினு—மாஷல்ஸ்ராலின் அவர்களே! 1925-ம்ஆண்டு தங்கள்அரசியற் குழுவிலிருந்த முழுஅங்கத்தவரும் எத்தனை பேர்?

ஸ்ராலின் — நானும்உட்பட ஏழு பேர்.

வினு — இன்று தமதுஉடன்தோழர்கள் எங்கே இருக்கின்ருர்கள்?

ஸ்ராலின் — பூமிக்குக்கீழே இருக்கின்ருர்கள்.

வினு— என்ன! விநோதமாய்இருக்கிறதே. அவர்களைப்பற்றிய விசேஷங்களைத் தயவுசெய்து தெரிவிப்பீர்களா?

ஸ்ராலின்— றைக்கொவ், சினேவியெவ், கமெனெவ், புகாறின் ஆகிய நால்வரும் சுடப்பட்டார்கள்.

வினு— ஐயையோ! நால்வருக்கும் ஒரேகதியா? சரி, மற்றவர்கள்பாடு?

ஸ்ராலின்— ரொம்ஸ்கி தற்கொலை செய்துகொண்டான். றொட்ஸ்கி மெக்சிக்கோவில் தள்ளுண்டு அங்கே சதிமானமாகச் சுட்டுக்கொல்லப்பட்டான்.

வினு,— மிஸ்றர் ஸ்ராலின்! அப்போ தாங்கள் பெரியஅதிர்ஷ்டசாலியாகக் காணப்படுகிறீர்களே.

ஸ்ராலின்— இல்லை, அதிர்ஷ்டசாலி அல்ல. ஆனுல், தூரதிருஷ்டியுடன் முன்னவதானயாக நடந்துகொள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

தூதன் இதுகாலவரை புறம்போக்கான ஓர்பகுதியில் வசித்திருந்தமையால் பலசம்பவங்களையும் இலகுவில் அறிந்தெழுதுவது பெருங்கஷ்டமாயிருந்தது. ஆனால், தற்போது நாட்டின்மத்தியில் வசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையாலே பலவிதசம்பவங்களையும் இலகுவில் அறிந்தெழுதக் கூடியதாயிருக்கிறது. நிற்க, இங்கே சனசமூகசங்கங்களின் கூட்டவிழாக்களின்போது அழகர்கள், அழகுஇராணிகளின் தெரிவுப்போட்டி அதி கம்விசித்திரமாக நடைபெற்றதாம். ஆனால், அரசபெருமானின் எதிர்பாராதமரணத்தாலே எல்லாம் இலவுகாத்த கிளிபோலத்தான் முடிந்ததாம். இதிலும்பார்க்க நல்லொழுக்கப் போட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் நாட்டுக்கு மிகநன்மையாயிருக்குமாம்.

**நவீன மதுவிலக்கு:**— கள்ளுத் தவறணைகள் வேண்டாம்வேண்டாமென வாய்ப்பறைசாற்றி வாக்குரிமை மூலம் சிலதவறணைகளைநீக்கிய போலிப்பெரியார்கள்சிலர் தற்போது பஸ் மூலமாகவும், பெருங்கஷ்டப்பட்டுக் கால்நடையாகவும் பலமைல் தூரம் தாண்டிச்சென்று மன்னார்ப்பட்டினத்திலுள்ள தவறணையிலே கண்களையும் இறுகமூடிக்கொண்டு மண்டியென்றும்பாராது மடமடவென்று வயிறாரக் குடித்துவிட்டுத் திரும்புங்காட்சி பெரும்வேடிக்கையாக இருக்கின்றதாம். இவ்விதம்குடித்துவிட்டுத் தங்கள்கிராமத்தை அடைந்ததும் மதுவிலக்குப் பிரசாரஞ்செய்வதைப்பார்த்தால் அதிலும்பெரியவேடிக்கையாயிருக்கிறதாம். இதனைத்தான் நவீனமதுவிலக்கெனச் சொல்லவேண்டியிருக்கின்றது.

**சிலுவை ஸ்தாபகம்:**— உயிலங்குளம் சம்பேதுருபாவிலு கோயிலுக்குப் பெருந்தெருவிலிருந்து செல்லும் சிறுவீதிச்சந்தியிலே வண. எவ். றெனுர்ட்சுவாமிகளின் முயற்சியால் அழகியதோர் கற்சிலுவை நிறுவப்பட்டிருக்கிறது. இது 27-1-52 காலை பூசையின்பின் மாணவர்களும், மக்களும் செபங்கள்ஓதி வரிசையாய்நிற்கச் சுவாமியவர்களால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. அவ்வேளை அவர் இந்தக் கற்சிலுவையிலும் உறுதியுள்ளதாய் உங்கள்விசுவாசம் இருக்கவேண்டியது என்றபொருள்படச் சமயோசிதமாக நன்மதிகூறலாயினர்.

**நுளம்புகளின் களியாட்டம்:**— மலேரியாத்தடைப் பகுதியாரால் நுளம்புகளைப் பரிகாசஞ்செய்யும் பொருட்டுத் தெளிக்கப்பட்டுவந்தமருந்தினுல் ஆரம்பகாலத்திலே அடங்கிஒடுங்கிக்கிடந்த நுளம்புகள் மீண்டும்தலைகாட்டத்தொடங்கியிருக்கின்றன. அவற்றின் இவ்விதகளியாட்டத்திற்குக் காரணம், மருந்துடன் தண்ணீர் கலப்பதுதானென்பது சிலர்கூறும் நியாயமாகும். இதற்குச் சுகாதாரப்பகுதியார் தடைநியாயம் காட்டுகின்றனர். இதுஎவ்வாறாயினும் இரவிலே நுளம்புகளின்களியாட்டமோ களறுந்தரமன்று.

**மாந்தைப்பதியின்லூர்துகெபி:**— அந்தக்காலத்திலே நம்திருமறை ஆணித்தரமாக ஊன்றியிருந்ததும், மடுமாதாவின் பழையபரிசுத்ததலமாக விளங்கியிருந்ததுமான மாந்தைப்பதியின் லூர்துகெபியிலே பரிசுத்தலூர்து நாயகியின் திருநாள் இம்மாசம்11-ந் திகதி பத்தியருட்சியாய்க் கொண்டாடப்பட்டபோது, பெருந்திரளானபக்தர்கள் அங்குசமுகமாயிருந்து அதனைச் சிறப்பித்தார்கள்.

**குருத்துவ யூபிலிவிழா:**— மாதோட்டத்தின் மத்தியஸ்தானமென்றுகூறப்படத்தகுந்த உயிலங்குளம்—முருங்கன்பங்கிலே பலவருடகாலம் கட்டளைக்குரவராயிருந்து அருந்தொண்டுகள்புரிந்து மங்காப் புகழ்பெற்ற வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமிகளின் குருத்துவ வெள்ளி யூபிலிவிழா அவராலேகட்டியெழுப்பப்பெற்ற முருங்கன் கிறீஸ்துஇராசா ஆலயத்தில் சென்ற 16-ந்திகதியன்று சிறப்பாகக்கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 8-30மணிக்குத் திவ்விய பூசைநிறைவேறியது. பின்னர் அதிவண. எஸ். பீற்றர், வண. எவ். றெனுர்ட் எனும் குருவர்கள்சமுகமாக விழாக் கொண்டாட்டம் பரிமளிப்பாக நடந்தது. அவ்வேளை அதிவண. எஸ். பீற்றர்சுவாமிகள் யூபிலிநாயகரின் அருந்தொண்டுகளைஎடுத்துக்காட்டி அவர்க்குப் புகழ்மாலைசூட்டினர். யூபிலிநாயகரின்பதிலுரையும், திரு. சீமாம்பிள்ளை அவர்களின் நன்றியுரையும் மிகஅலங்காரமாயிருந்தன. விழாவிலேபெருந்தொகையானேர் கலந்துகொண்டமை பாராட்டத்தக்கதாகும். —சுபம்.

## பாராட்டுவிழா

ஊர்காவற்றுறை இளைஞர் சங்கத்தின் தனுதிகாரியாகக் கடமையாற்றிக் கொழும்புநகருக்குப் பிரியவிருக்கும் திரு. S. சாள்ஸ் அவர்களது சேவை நலனைப் பாராட்டுமுகமாக, இங்குள்ள வாசிகசாலையில் சென்ற 1-2-52 மாலை 8-00 மணிக்குத் திரு. S. A. F. துரைசிங்கம் அவர்களின் தலைமையில் ஓர் பரிமளிப்பானவிழா நடந்தேறியது. தலைவர் பேசுகையில், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்துள்ள சமூகத்தொண்டர்களில் திரு. S. சாள்ஸ் ஒருவரென்றும், கொழும்பிலே உத்தியோகத்தின்பொருட்டு ஏறக்குறைய நிரந்தரமாகச் சீவித்துவரும் ஏராளமான ஊர்காவற்றுறைவாசிகள் ஒன்றுசேர்ந்து, பலவிதமான கைத்தொழில் ஸ்தாபனங்கள், வியாபாரக் கூட்டுறவுச்சங்கங்கள், சிறுயந்திரசாலைகள் முதலியவைகளைத் தீவுப்பகுதிமக்களுக்குப் பொதுவிலே ஊர்காவற்றுறையில் ஸ்தாபிக்கும்படி அரசாங்கத்தையும், மற்றும் முதலாளிமாரையும் கேட்டால் ஒருவேளை வருங்கால இளைஞராவது ஊர்காவற்றுறையிலே சீவிப்பதற்கு வழிவகைதேடிக்கொள்ளமுடியுமென்றும், இதற்காக எல்லோரும் தம்மாலானமுயற்சி எடுக்கவேண்டுமென்றும் கூறிமுடித்தார்.

ஆசிரியர் லீனஸ் பேசுகையில், திரு. சாள்ஸ் அவர்கள் எப்பொழுதும், எல்லோருக்கும் முன்மாதிரிகையாய் இருந்தாரென்றும், அவர் பிரிவுஎல்லோருக்கும் வருத்தத்தைக் கொடுப்பதாகுமென்றும்கூறினுர். திரு. எஸ். யோசெவ், திரு. S. J. P. றெஜினேல்ட், திரு. B. வில்லியம் கொலின்ஸ், திரு. G. F. அலோசியஸ் முதலானேர்களும் பிரிபவரின் குணுதிசயங்களையும், பிறவற்றையும் எடுத்துரைத்தார்கள். இதன்பின் விருந்துபசாரம் நடந்தேறியது. திரு. சாள்ஸ் பதிலளிக்கையில், சடுதியாகத் தான் பிரியநேர்ந்தாலும், இவ்வளவு குதூகலமான பாராட்டுவிழா சிறப்பாக நடைபெற்றதற்காக நன்றி தெரிவித்ததும் விழாமுடிவெய்திற்று.

—நிருபர்

## பாப்பரசரும் மகாராணியாரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்வாட்அரசர்சென்றூர். இவர் வின்சர்கோமகனென அறியப்படுகின்றூர். இவர் பதினைந்தாம் ஆசீர்வாதப்ப பாப்பானவரைச் சந்தித்துத் திரும்பினூர். இவரைத்தொடர்ந்து எலிசபேத் மகாராணியின் சகோதரியான மார்கறெற்இளவரசி மூன்று வருடங்களின்முன் தற்போதையபாப்பரசரைச் சந்தித்தனர். கடைசியாகஎலிசபேத்மகாராணியாரும், எடின்பரோகோமகனும் அவரைச்சந்தித்தார்கள்.


# "வலை மால்"

இப்பொழுது எங்களால் ஏராளமாகத் தருவிக்கப்பட்டு, மிகவும் திறமானதாகவும், நல்லமுறுக்குள்ளதாகவும், தற்கால விலைகளில் மீன்பிடிப்பதற்குத்தேவையான தோலி வலைமால்கள், மற்ற எல்லாவித தினிசுகளிலும் கீழ்க்கண்ட இடங்களில் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன.

எங்களிடம் உங்கள் தேவைகளைப்பெற்று
திருப்தி அடையுங்கள்.
வி. பி. பி. மூலமாகவும் ஆடர்கள் அனுப்பப்படும்.

**ஏ. எஸ். பெர்ணுண்டோ & பிரதர்ஸ்,**

| | |
|---|---|
| நம். 85, கிரேண் ஸ்றீட், | நம். 79, யூனியன் பிளேஸ், |
| "சந்திவலைக்கடை" | கொம்பனித்தெரு, |
| நீர்கொழும்பு. | "ஸ்லேவ் ஐலன்ட்" |
| | கொழும்பு, 2. |




### அாச்சியசஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற்டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

வல்வெட்டித்துறை:— நான் அர்ச். அந்தோனியாரிடம் தாழ்மையாய்ச்சமர்ப்பித்த விண்ணப்பத்தை அனுக்கிரகித்தபடியால் நேர்த்திப்படி அவரின்ஏழைகள் தருமஅப்பத்துக்குக் காணிக்கையாக ரூபா 3 அனுப்புகிறேன். அர்ச். அந்தோனியாருக்கு என்றும் புகழ்ச்சியுண்டாவதாக.

அ. அன்னம்மா

வவுனியா:— கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரிடம் நான் கேட்டுவந்த வரங்களில் முக்கியமானஒன்று அவரின் விசேஷசகாயத்தால் கிடைத்துவிட்டது. இன்னும் மற்றவைகளும் வெகுவிரைவில் கிடைக்கச்செய்யத் திருஇருதயநாதர் அருள்புரியுமாறு மருதமடு மாதாவையும், விசேஷமாய் அர்ச். அந்தோனியாரையும் மன்றுடுமாறு சபையாரை வேண்டுவதுடன் நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கும்படியும் தயவாய்க் கேட்கிறேன்.

P. J. சிறில்

கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

முள்ளிக்குளம்: எஸ். வரோணிக்கா கூஞ்ஞ 1-00—முருங்கன்: பி.எவ். சூசைப்பிள்ளை 1-00—மஸ்கேலியா:பி. கபிரியேல் 1-00—வட்டகொட: ஏ. வேலாங்கண்ணி 1-00—கொழும்பு: எஸ். எம். யோசேப்பு 3-00 — கல்கமுவா: வி. பிரான்சீஸ்கு 3-00, ஏ. மரியாம்பிள்ளை -60, எஸ். செபஸ்தியாம்பிள்ளை -50, எம். எஸ். அந்தோனிப்பிள்ளை -50, ஆர். எம். செபஸ்தியாம்பிள்ளை 2-50—வட்டகொட: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 2-00— சூராவத்தை: எஸ். தேவசகாயம் 1-00 — கேகாலை: ஏ. யுவக்கின் 5-00 — நீர்கொழும்பு: மேரி லோறு பர்ஞந்து 4-00 — மஸ்கேலியா: கே. ஜி. சூசை 3-00, எம். வஸ்தியாம்பிள்ளை 2-00, எம். தாண்டவன் 3-00 — நிவோடா: ரி. மனுவல் 3-00— கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 3-00 — உடப்புசலாவை: எஸ். எம். யோசேப் 10-00, மிசெஸ் எஸ். வி. பீற்றர் 1-00 — நாவற்காடு: வி. மனுவல் 5-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 — மாருவில்: பிருங் அன்ரன 17-00 — கல்கமுவா: வி. பெஞ்சமின் 1-00--நாவற்குளி: ரி. வில்லியம் 2-75 — டின்னியா: போல் செல்லம்மா 5-00—இல்லா: எஸ். கே. மரியாம்பிள்ளை 5-00—அப்புத்தளை: பீற்றர் 2-00 —முள்ளிக்குளம்: எல். அருளம்மா லேனு 1-00—கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00 — நுவரெலியா: எஸ். எம். சந்தனம் 2-00 — வண்டுறும்ப: சி. எஸ். பிள்ளை 12-00 — கொழும்பு: ஓர் உபகாரி 5-00—இற்றுலை: மிசெஸ் எவ். அன்ரன் 2-00 — பண்டாரவளை: எம். ஏ. சுப்பையா 1-00 — அம்பிற்றியா: மோசேஸ் டானியல் 2-00 — கொக்கிளாய்: ஏ. அன்னம்மா 1-00—வவுனியா: பி. ஜே. சிறில் 1-00—லின்டுலா: இ. சில்வானுஸ் 5-00 — வேப்பங்குளம்: ரி. கிளாறம்மா 1-00, எஸ். செசிலியா -50—யோகபுர்: எம். மரியாம்பிள்ளை 4-62 —நனுஓயா: ஏ. பஸ்ரியன் -50—அரிப்பு: ஏ. எம். குலாஸ் 5-00 — வல்வெட்டித்துறை: ஏ. அன்னம்மா 3-00 — அப்புத்தளை: ஆர். ஆரோக்கியம் 2-00—கருக்குப்பனை: டபிள்யு. எம். பெர்ணுண்டோ 2-00.

| | |
|---|---|
| The Director, St. Joseph's Conference. Bishop's House JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |

## விளம்பரம்

இல. 2370/A

யாழ்ப்பாணம் றெக்குவஸ் கோடு

1. யாழ்ப்பாணம் கதிரவேலு சூசைப்பிள்ளை
2. ,, A. மரியாம்பிள்ளை செல்வத்துரை
3. ,, பேதுருப் பிள்ளை அந்தோனிப்பிள்ளை
4. ,, நீக்கிலாப் பிள்ளை மூத்ததம்பி சவிரிமுத்து
5. ,, P. D. சவிரிமுத்து
6. ,, V. J. மனுவேற்பிள்ளை

—வாதிகள்.

Vs.

யாழ்ப்பாணம் பெரியதெரு மூேஸ் ஆட் ஸ்ரூடியோ—யோண் பிலிப்பு யோசேப்

—பிரதிவாதி.

யாழ்நகர கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்க அங்கத்தவர்களுக்கு.

இதனுல்அறிக மேற்சொல்லிய வாதிகளினுல் தாம் யாழ்நகர கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்க அங்கத்தவர்கள் என்றமுறையிலும் குறித்தசங்கத்தின் இதர அங்கத்தவர்கள் சார்பாகவும் 1950-ம் ஆண்டு ஆடிமாசம் 30-ந் திகதி 12×10 அளவில் சங்கஅங்கத்தவர்களின் பிரதிமைப்படம்எடுப்பதற்குச் செய்துகொண்ட ஒப்பந்தப்படி எடுக்கப்பட்ட படத்தைக் கொடாதபடியால் மேற்சொல்லிய பிரதிவாதிமீது நட்டம் ரூபா 65, கொடுத்த ரூபா 35 ஆக மொத்தம் ரூபா 100 அறவாக்க இவ்வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

குறித்த சங்க அங்கத்தவர்கள் சார்பாகப் பிரதிவாதிமீது வழக்குத்தொடர மேற்சொல்லிய வாதிகளுக்கு இந்தக் கோடு 1951-ம் ஆண்டு ஆவணிமாசம் 2-ந் திகதியன்று அனுமதிஅளித்திருக்கின்றது.

கோட்டின்ஆணைப்படி
S. சிவசிதம்பரம் (ஒப்பம்)
யாழ்ப்பாணம் றெக்குவஸ் கோட்டுப் பிரதம லிகிதர்
7-8-51

தயாரித்தது:
Alfred Swampillai
வாதிகளின் புரக்டர்.
M 90 12, 15-10-51

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 28-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org